விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 20 சனிக்கிழமை (03.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## தமிழ்க் கூட்டமைப்பைத் தடை செய்தால் மக்கள் விடுதலை முன்னணி போராடும்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய பாதுகாப்புச் செயலாளருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அதனையும் மீறிச் செய்தால் மக்கள் விடுதலை முன்னணி போராட்டங்களை முன்னெடுக்கும் எனக் குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் பொத்துஹரவிலுள்ள ரோமியோ விருந்தகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை விரும்புபவர்கள். இன்று பல துறைகளிலும் சீர்குலைவு ஏற்பட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் பிரி.கோரிக்கை, அரசாங்கம் நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனப் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இலங்கையின் உள்விவகாரம் சம்பந்தமாக மிலிபான்ட் கோரிக்கை விடுக்க முடியாது என அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர் பேரவை, சுயாட்சிக் கோரிக்கை ஒன்றை விடுத்து மிலிபான்டிடம் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது. இது தொடர்பில் அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்த மிலிபான்ட் (19 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.சபையின் செயற்பாடுகள் இரட்டை நிலைப்பாடு கொண்டவை

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஈராக் விடயத்தில் பிரித்தானியா தலையிட்டது தொடர்பான விசாரணைகளுக்கு 9 வருடங்களை எடுத்துக் கொண்ட ஐ.நா., இலங்கை தொடர்பில் 9 மாதங்களில் விசாரணைகளை மேற்கொள்வது அதன் இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுவதாக வெளிவிவ கார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை பெற முடியும்

## ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனஅக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கல்கிசைப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்கள் பாரியளவில் மீறப்பட்டு வருவதாகவும் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு பாரிய அச்சுறுத்தல் (19 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மூன்றாம் வருட மாணவன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் பூநகரியைச் சேர்ந்த பாலசிங்கம் கருணாநிதி (வயது-25) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிறுத்தம் இலங்கை அரசுக்கான தண்டனையாகாது

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் நிறுத்தம் என்பது அதற்கான தண்டனையாக அமையாது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து புடைவைகளைச் கொள்வனவு செய்வோரின் சங்கத்தின் 17-வது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் பேர்னாட் சா வேஜ் இவ்வாறு (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.மு. வேட்பாளர் சுசில் கிந்தெல்பிட்டிய கைது

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் சுசில் கிந்தெல்பிட்டிய நேற்றுக் காலை வெலிக்கடைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துன்புறுத்தல்கள் மேற்கொள்ள முயற்சித்ததாக பெண்மணி ஒருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை (19 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எக்ஸ்ரே இயந்திரம் திருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே இயந்திரம் இன்று முதல் செயற்பட ஆரம்பிக்கும் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

எக்ஸ்ரே இயந்திரத்தை பொருத்தும் பணி நேற்றுடன் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மின் ஒழுக்குக் காரணமாக எக்ஸ்ரே இயந்திரம் சேதமடைந்தது.

இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட எக்ஸ்ரே இயந்திர உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் சிரமமின்றி எக்ஸ்ரே படம் எடுக்க முடியும் என கூறப்பட்டது. (ச-7,5)

## அம்புலன்ஸ் மோதி விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அம்புலன்ஸ் வண்டி மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர் இச்சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனும் படுகாயமடைந்தனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ்.சிவபாக்கியம் (வயது 59), மிருசுவிலைச் சேர்ந்த கே.நிஷாந்தன் (வயது 21) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறு காயங்களுக்குள்ளான மேலும் இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச-30)


நீங்கள் பெறும் பட்டமானது அதியுயர்ந்த வருமானமுடைய தொழில் வாய்ப்புக்களை இலக்காக கொண்டதா?

A/L Yes → BIT
No → FIT → BIT

University of Colombo



பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்தில், தமிழ் மூல விளக்கங்கள், குறைந்த செலவு, சிறந்த பெறுபேறு

BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer(USA), ICDL

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில் Closing Date 10.04.2010

MCS 324,Palaly Road,Parameswara Junction Web site : Http://www.mcsitcampus.org Call 772395895

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

(சி-5038)


# அறக்கட்டளை ஒன்றின் ஊடாக புலிகள் நிதி திரட்டியுள்ளனர்

## அவுஸ்திரேலிய பத்திரிகை கூறுகிறது

அவுஸ்திரேலிய அறக்கட்டளை ஒன்றின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி திரட்டியுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தகவல் வெளி யிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் குறித்த வீடியோ காட்சிகள் மற்றும் புகைப் படங்கள் போன்றன மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரினால் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது இந்த ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட மூன்று அவுஸ்திரேலிய தமிழர்கள் தொடர்பில் புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த மூன்று தமிழர்களும் பல்வேறு வழிகளில் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியுள்ளதாகவும் அதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ச-5)

## கத்திக்குத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞன் ஒரு வர்படுகாயமடைந்தநிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ்.செல்வகுமார் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப இளைஞனின் வீட்டுக்குச் சென்ற சிலர் அவரை வெளியே அழைத்து தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-30)

## மெய்வல்லுநர் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மின்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி அபிவிருத்திச்சங்கத் தலைவர் திருமதி குணமணி சிறிசாந் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாநிகழ்வில் சாவகச்சேரி உதவிபிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் வ.செல்லத்துரை, தொழில் அதிபர் எஸ்.குலேந்திரராஜா ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ச)


வாடகை வீடு தேவை

இரண்டு பேர் தங்குவதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகை வீடு தேவை.

தொடர்பு : 0774609400 (இ)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.மு.பாலசிங்கம் அவர்களுக்கு "கலாபூசணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும், திரு.அ.அழகேந்திரன் அவர்களுக்கு "கலைமணி" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டும் யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்ற திரு.ச.டிலக்ஷன் (B.B.A) திருமதி பி.விஜயஸ்ரீ (B.Com.Spe) திருமதி பி.தனுசா (B.A. Hons) திரு.அ.சுபேசன் (M.A.Spe) திரு.பொ.சந்திரவேல் (M.A.Spe), திரு.S. உதயபாலன் (M.A.Spe)

ஆகியோர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று மேன்மையடைய வேண்டுமென வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

வட்டுக்கோட்டை.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி கலக் விசுவநாதன் J.P

(சி-4965)



சுயேட்சைக்குழு-10




கலைமாணி, கல்வியியல் முதுமாணி, கல்வியியல் கலாநிதி
ச.நா.தணிகாசலம்பிள்ளை
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
(முதன்மை வேட்பாளர்)

(சி-5038)





போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டு வருகின்றது இந்நிலையில்,

தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை!

பொ.ஐங்கரநேசன் MSc, PGDJMC

இலங்கைத் தமிழரசுக் கட்சி X 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!

(சி-5040)

பழைய மாணவர்கள்-யூனிவேர்சல்

# இன்று ஒரு தகவல்

## கங்கை நீர்

ஒருத்தர் வந்தார்." சேர், நான் நிறைய பாவம் பண்ணியிருக்கிறேன். அதையெல்லாம் தொலைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். என்ன பண்ணலாம்?" என்றார்.

"காசிக்குப் போய் கங்கையில் குளித்து விட்டு வாருங்கள்" என்றேன்.

" நான் அந்த ஊரில் இருந்துதானே சேர் வாறேன். எனக்குச் சொந்த ஊரே அதுதானே" என்றார்.

இவரை எந்த ஊருக்கு அனுப்புவது?

கங்கை புனிதமானது என்று ஆன்மீகவாதிகள் சொல்கிறார்கள். அதைத்தான் இப்பொழுது விஞ்ஞானிகளும் சொல்கிறார்கள்.

"கங்கா தீர்த்தம் கொண்டு வந்திருக்கிறேன். அது எவ்வளவு காலமானாலும் கெட்டுப் போகாது" என்று சொல்வார்கள். அது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? கங்கைநதி நீர் இருக்கிறதே... அது மற்ற நதி நீர் மாதிரி இல்லை.

அதற்கு சில விஷேச குணமெல்லாம் இருக்கிறது. புதுடில்லியில் மலேரியா ஆராய்ச்சி மையம் ஒன்று இருக்கிறது. அதில் இருக்கும் விஞ்ஞானிகள் மலேரியாக் காய்ச்சல் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகளெல்லாம் செய்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

மலேரியா கிருமிகளை பரப்பக்கூடிய நுளம்புகள் எல்லா விதமான நீரிலும் வசிக்குமாம். ஆனால் கங்கைநதி நீரில் மட்டும் இல்லையாம்.

டில்லிக்குப் பக்கத்தில் கங்கைநதி ஓரமாகவுள்ள சில கிராமங்கள் மற்றும் யமுனைநதி ஓரமாகவுள்ள கிராமங்கள் என்பவற்றில் ஒரு ஆய்வு நடத்தினார்களாம்.

அந்தக் கிராமங்களில், மேனிலை நீர்த்தொட்டிகளில் உள்ள தண்ணீரைச் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். கங்கைநதி நீர் இருந்த தொட்டிகளில் மலேரியா நுளம்புகள் அறவே இல்லை. யமுனைநதி நீர் இருந்த தொட்டிகளில் அவை அதிகமாக இருந்ததாம்.

டில்லியில் மயூர்விகார் காலனி என்று ஒரு பகுதி கங்கை-யமுனை இரண்டு நதிநீரும் கலந்து தண்ணீர் விநியோகிக்கிறார்களாம்.

அங்கேயுள்ள தொட்டிகளில் அந்த நுளம்பு அறவே வளர்வதில்லையாம். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் கங்கைநீர் எந்த நீருடன் கலந்தாலும் அதில் மலேரியா நுளம்பு வளர்வதில்லை என்று தெரிகிறது.

மலேரியாக் கிருமி மட்டுமல்ல, எந்தக் கிருமியுமே அதில் இருக்காது போலிருக்கிறது.

டி.ஹெறில்லி என்ற பிரான்ஸ் மருத்துவ வல்லுநர் ஒருத்தர் சில ஆராய்ச்சிகள் செய்தார்.

அவர் என்ன சொல்கிறார் என்றால்... கொலரா-சீதபேதி போன்ற நோய்களால் இறந்தவர்களின் பிணங்களெல்லாம் கங்கையில் மிதந்து வருவதைப் பார்த்திருக்கிறேன். சாதாரண தண்ணீரில் அது மாதிரி வந்தால் சுற்றியுள்ள தண்ணீரில் அந்தக் கிருமிகள் ஏராளமாக இருக்கும்.

ஆனால் கங்கையில் பிணத்தைச் சுற்றியுள்ள தண்ணீர் கூட சுத்தமாக இருக்கிறது. ஒரு கிருமியைக் கூட பார்க்க முடியவில்லை. அது எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது என்கிறார்.

கனடா மெக்கில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எப்.சி. ஹாரிசன் கூட கங்கை நீர் பற்றி ஆராய்ச்சி செய்தார்.

அவர்," எந்த விதமான கிருமியையும் கங்கைநதி நீரில் போட்டால் 3 அல்லது 4 மணி நேரத்தில் அவையெல்லாம் இறந்து விடுகிறது " என்கிறார்.

அதெல்லாம் இருக்கட்டும்.

கங்கைநதி நீர் இப்படி கிருமிநாசினியாக இருப்பதற்கு என்ன காரணமாக இருக்கும்?

இமயமலையில் இருக்கும் மூலிகைகள் தான் இதற்குக் காரணம் என்று இந்திய மருத்துவத்துறை வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

கங்கை நீரில் கதிரியக்க கனிமங்கள் இருக்கிறது. அதனால் தான் கிருமிகள் அழிந்து விடுகிறது என்கிறார்கள் நவீன விஞ்ஞானிகள்.

வெள்ளி-செம்பு-நிக்கல்-இரும்பு-குரோமியம் போன்ற கனரக உலோக தாதுக்கள் கங்கை நீரில் கரைந்திருக்கிறது. கிருமிகளை அழிக்கக் கூடிய சக்தி அவற்றுக்கெல்லாம் உண்டு.

இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் கங்கை நீர் ஒரு சிறந்த கிருமிநாசினி என்பதில் சந்தேகமில்லை.

அதனால் தான் கங்கையில் குளித்தால் எல்லாம் தொலையும் என்று சொல்வதுண்டு. அங்கே போய் வந்தால் எதையாவது விட்டுட்டு வரவேண்டும் என்று சொல்வது வழக்கம்.

ஒருத்தர் ரயிலில் காசிக்குப் போனாராம். அங்கிருந்து திரும்பி கால்நடையாக வந்து சேர்ந்தார்.

"ஏன் சேர் இப்படி?" என்று கேட்டேன்.

"காசிக்குப் போனால் எதையாவது விட்டுட்டு வரவேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள். நான் அங்கே போனதும் என்னுடைய மணிபேர்சை விட்டுட்டேன். யாரோ அடித்துக் கொண்டு போய்விட்டான்"

"அதனால் தான் நடந்து வருகிறேன்" என்றாராம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

### உலக மலேரியா தினத்தை முன்னிட்ட

# பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, சித்திரப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மலேரியா ஒழிப்புத்திட்ட தலைமையகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள் நடத்தப் படவுள்ளது.

கட்டுரைப் போட்டியில் 11 முதல் 15 வயது வரையான மாணவர்கள் மலேரியா "நுளம்பிடமிருந்து பாதுகாப்படைவோம்" என்னும் தலைப்பின் கீழ் 600 சொற்களுக்கு குறையாமலும், 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் (16-20) "மலேரியாவை இலங்கையிலிருந்து ஒழிப்பதற்கு மக்கள் பங்களிப்பு" என்னும் தலைப்பின் கீழ் 1500 சொற்களுக்கு குறையாமலும் கட்டுரைகளை அமைத்தல் வேண்டும்.

மேலும் சித்திரப்போட்டி 11 முதல் 15 வயது வரை, 16 வயதிற்கு மேற்பட்டோர் (16-20) என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. சித்திரங்களை "மலேரியா நுளம் பிடமிருந்து பாதுகாப்படைவோம்'' என்னும் தலைப்பின் கீழ் வரைதல் வேண்டும். அத்துடன் இதற்கு எந்த மூலகமும்(நீர், சாயம், பெஸ்டல்) பயன்படுத்தலாம்.18''X14'' அளவிலான வெள்ளைக் கடதாசியில் சித்திரம் வரைதல் வேண்டும்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் மாணவரால் சுயமாக தயாரிக்கப்பட்டதை பாடசாலை அதிபர், வகுப்பு ஆசிரியர், சித்திரப்பாடத்துக்கு பொறுப்பான ஆசிரியர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இப்போட்டியில் வெற்றி பெறுகின்ற மாணவ, மாணவிகளில் முதலாமிடத்துக்கு ரூபா 10 ஆயிரம் ரூபாவும் 2 ஆம் இடத்திற்கு ரூபா 7 ஆயிரத்து 500 ரூபாவும் 3 ஆம் இடத்திற்கு ரூபா 5 ஆயிரம் ரூபாவும் ஆறுதல் பரிசாக தலா 2000 ரூபா வீதம் 10 பேருக்கும் வழங்கப்படவுள்ளது.

போட்டியாளர்கள் தங்களது பெயர், வயது,தரம், பாடசாலையின் முகவரி மற்றும் தொலைபேசி இலக் கத்தை குறிப்பிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன் பாடசாலையின் உத்தியோக முத்திரையும் இடுதல் வேண்டும்.

ஆக்கங்களைசித்திரப்போட்டி-2010, வைத்தியர் பிரியானி தர்மவர்தன, மலேரியா ஒழிப்புத் திட்டம், 555/5, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு -5 என்ற முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மலேரியா ஒழிப்புத் திட்டத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஓ-4)


# பரசிற்றமோலை உட்கொள்ளும் போது வைத்திய ஆலோசனையை பெற வேண்டும்

### ஔடதங்கள் அதிகாரசபை

பரசிற்றமோல் வில்லைகளை உட்கொள்ளும் போது மக்கள் வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டும் என தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அறியாமை காரணமாக சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கூடுதலாக பரசிற்றமோல் வில்லைகளை கொடுப்பதால் உயிராபத்து ஏற்படுவதாக அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதனை தடுப்பதற்காக பரசிற்றமோல் வில்லைகளை உட்கொள்ளுகையில் வைத்தியரின் ஆலோசனையை பின்பற்ற வேண்டும் என்ற அறிவுறுத்தலை மருத்துப் பொருட்களில் குறிப்பிடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், இது தொடர்பாக நாடு முழுவ திலும் உள்ள மக்களை தெளிவுப டுத்துவதுடன் சட்டவிரோத மருந்து பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிலையங்களை சுற்றிவளைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ஓ-4)



யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

03-04-2010

(பங்குனி 20 , சனிக்கிழமை)

பஞ்சமி பின்னிரவு 4.04 மணிவரை

அனுசம் முன்னிரவு 9.42 மணிவரை

இராகுகாலம் 9.10-10.40 மணிவரை

சுபநேரம் 3.10-4.40 மணிவரை

புங்குடுதீவு மடத்துவெளி பாலசுப்பிர மணியர் கொடி.


| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், காரிய தாமதம், மரியாதைக் குறைவு, போசன சுகம். |
| இடபம் | வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| மிதுனம் | பணவருவாய், சுகவாழ்வு, திடீர் பயணம், மனமகிழ்ச்சி. |
| கடகம் | வியாபார சிந்தை, குடும்பக் கவலை, பணக்குறைவு, போசன சுகக் குறைவு. |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், ரோகநிலை, முயற்சி தாமதம். |
| கன்னி | மனமகிழ்ச்சி, இனிய சம்பவம், பணவருவாய், எடுத்த காரியம் கைகூடும். |
| துலாம் | கடின முயற்சி, பொருள் விரயம், நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| விருச்சிகம் | சயன சுகம், பெரியோர் ஆசி, நல்லமுயற்சி, தனவருவாய். |
| தனுசு | எடுத்த காரியம் தாமதமாகும், பிதாசிந்தை, கோபமான நிலை, தனவிரயம். |
| மகரம் | தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, குடும்ப சுகம், காரிய அனுகூலம். |
| கும்பம் | சுபநிகழ்வு, காரிய நன்மை, உற்சாகம், நண்பர்கள் உதவி. |
| மீனம் | உடல் உழைப்பு , உஷ்ண வியாதி, பிரயாணம், முயற்சி தாமதம். |

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 70 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 70 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 40 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்—2010




சீ.கோபிதாசன்
(தொழிலதிபர்)





த.திருஞானசம்பந்தர்
(Rtd புகையிரதநிலைய அதிபர்)




ச.பத்மநாதன்
(விவசாயி)




செ.மகாலிங்கம்
(Rtd திட்டமிடல் பணிப்பாளர்)




செ.முத்துலிங்கம்
(ஆசிரியர்)




வீ.ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி
(சட்டத்தரணி)




வ.சண்முகராசா
(Rtd இலிகிதர்)





அ.முருகேசு
(Rtd அதிபர்)

## விடியலின் சின்னம் உதயசூரியன்!

## வீழ்ந்த எம் மக்களுக்கு கரம் கொடுப்போம்





இ.சாந்தசொரூபன்
(பொறியியலாளர்)




இ.இரத்தினமணி
(சமாதான நீதவான்)




சு.இராஜஇராஜேஸ்வரி
(Rtd ஆசிரியை)




கு.சதாசிவமூர்த்தி
(Rtd அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

(தி-5035)

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X

## 'துளிரும் நம்பிக்கை' திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி கனிஸ்ட இணை உப அதிபரும் நாடக ஆசிரியருமாகிய ஏ.சி.பிரான்ஸிஸ் நெறியாள்கையில் கல்லூரி மாணவர்களால் தயாரித்து வழங்கும் ***திருப்பாடுகளின் காட்சியும் வெற்றி நிகழ்வும்*** என்கின்ற நாடக ஆற்றுகை நிகழ்வு கல்லூரி பிறவுண் மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் இரவுக்காட்சியாக மேடையேடுகின்றது.

***துளிரும் நம்பிக்கை*** என்கின்ற தலைப்பில் 90 பாத்திரங்கள் பங்குபற்றும் 80 அடி நீளமான திறந்தவெளி அரங்கில் மாபெரும் ஆற்றுகை நிகழ்வாக நடைபெறவுள்ளது.

கிறிஸ்தவச் சடங்கு நிலைப்பட்ட இவ்வாற்றுகையை யாழ்ப்பாணக் கல்லூரி கடந்த 5 வருடமாக ஈஸ்ரர் தினத்தன்று மேடையேற்றி வருகின்றது.

மேற்படி நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் முழுமையான நடிப்பாற்றல் வெளிப்படுத்தப்படவுள்ளதோடு அருளுரையினை கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் ஆற்றவுள்ளார். (ஓ-27)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்திய பகுதியில் உள்ள சில வீதிகளில் நண்பகல் மற்றும் அந்திசாயும் வேளைகளில் திருடர்கள் தொல்லை அதிகரித்து வருகின்றமையால் இவ்வீதிகளில் பயணம் செய்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நவநாகரீக உடையில் புதிய சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வரும் இளைஞர்களே இத்திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-79)

# திருகோணமலையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் தமிழ் விவசாயிகள்

(கொழும்பு)

மகாதுலுவீவ என பெயர்மாற்றம் செய்யப்பட்ட மகா விலங்குளம் 13 ஆம் பிரிவில் நெல்விவசாயம் செய்த நூற்றி நாற்பது தமிழ் விவசாயிகளை காணிநிலங்களை விட்டு வேறு இடங்களுக்கு செல்லுமாறு புத்தபிக்குகள் அச்சுறுத்தி வருவதாக தெரியவருகிறது.

புத்தபிக்குகள் நெல்வயல்கள் இருக்கும் இடத்தில் பழைய புத்த விகாரை இருந்தாகவும் அவற்றினை தொல்பொருள் ஆய்வு செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் குடும்பங்கள் சாந்திபுரம் மற்றும் மகா விலாங்குளத்துக்கு அருகாமையில் உள்ள நொச்சிக்குளம் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது. இவர்கள் தற்போது மொறவீவ பிரதேச செயலரிடம் முறைப்பாடு ஒன்றினை கையளித்துள்ளார்கள். இப்பிரதேச செயலரிடம் முறைப்பாடு ஒன்றினை கையளித்துள்ளார்கள்.

இப்பிரதேசம் முன்னர் முதலிக்குளம் என அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மகாவிலாங்குளம், மூதலிக்குளம் ஆகியன புராதன தமிழ் கிராமங்களாகும். இவை திருகோணமலையின் வடக்கு பகுதியில் திருகோணமலை- அநுராதபுரம் நெடுஞ்சாலைக்கு பக்கமாக உள்ளது. (2-6)

## எட்டு இலங்கை அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு விசா

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரிய எட்டு இலங்கை அகதிகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் பாதுகாப்பு விசாக்களை வழங்கியுள்ளது. இந்த தகவலை அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் மொத்தமாக சேர்த்து 41பேருக்கான பாதுகாப்பு விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 27 பேர் ஆப்கானிஸ்தானியர்களும் அவர்களுள் அடங்குகின்றனர். அத்துடன் மேலும் இரண்டு பேர் வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவில் இருந்த அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் படி அவர்கள் அவுஸ்திரேலியாவில் தங்குவதற்கு தகுதி உடையவர்கள் என உறுதியான தன் பின்னரே விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்று கிறிஸ்மஸ் தீவில் இருந்து விசாரணைகளுக்காக மெல்பேர்னுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அகதிகளை கடத்தியமைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இந்தோனேசிய படகு செலுத்துனர்களும் டார்வின் தீவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## புதுவருடப்பிறப்பை முன்னிட்டு சனி,ஞாயிறு,விடுமுறைதினங்களில் வர்த்தக நிலையங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி புதன் கிழமை வரையுள்ள சனி,ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் எனவும் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் யாழ். வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை வர்த்தக நிலையங்கள் யாவும் மக்களின் நலன் கருதி 4,11ஆம் திகதிகளில் திறந்திருக்கும் என பருத்தித்துறைத்துறை வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. (ஓ)

# பண்ணை வீதியில் சுத்தத்தை பேணவும்

(வேலணை)

தீவகம் யாழ் வீதியில் (பண்ணைவீதி) மீனவர்கள் தமது கடல் உணவு கழிவுகளை விட்டுச் செல்வதால் வீதியால் செல்வோர் பாதிப்பு அடைகின்றனர்.

அதாவது இவ்வீதியை அண்டி கடற்றொழில் செய்யும் கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் கடல் உணவை காலை வேளையில் இவ்வீதியில் வைத்து தெரிவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் தாம் பிடித்து வரும் கடல் உணவின் கழிவுகளை கழிவுகளை வீதியிலேயே போட்டுவிட்டு செல்வதால் (கடல் உணவு தெரியும் இடத்தில்) துர்நாற்றம் ஏற்படுவதுடன் வீதியில் குப்பைகள் (முள்ளுகள், ஓடுகள்) சேர்வதால் வீதியால் பயணிப்போர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இதை கவனத்திலெடுக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலும் கடற்றொழில் செய்வோர் தமது கடல் உணவு தெரிவை வீதியில் செய்யாது பிறிதொரு இடத்தில் செய்தால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாது தவிர்க்கலாம் என்றும் பயணிக்கும் மக்கள் கூறுகின்றனர். (ஓ-22)



# தேர்தல் தொடர்பில் நியாயமான நடைமுறைகளை பின்பற்றவேண்டும்

## நீதிமன்றம் ,தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பில் நியாயமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான விசாரணைகளின் போது உச்ச நீதிமன்றம் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் தொடர்பில் சரியான வழிகாட்டுதல்கள் முன்வைக்கப்பட வேண்டுமெனக் கோரி கரு ஜயசூரிய இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் நேரத்திற்கு நேரம் வெளியிட்டு வரும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் நகைப்புக்கு உரியதாக மாறியுள்ளதென கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சகல மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் தேர்தல் நியாயமானதும் சுதந்திரமானதுமாக நடைபெறுவதற்கு தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் நடவடிக் கைகளினால் தேர்தல் தொடர்பான மக்களின் நம்பிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# மேல் மாகாணசபை உறுப்பினர்கள் 12 பேர் ஆசனங்களை இழக்கக்கூடும்

(கொழும்பு)

மேல் மாகாணசபையைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் ஆசனங்களை இழக்கக் கூடிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த எட்டு மாகாண சபை உறுப்பினர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் இவ்வாறு பதவியை இழக்க நேரிடலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

மாகாணசபைக்கு அறிவிக்காமல் கடந்த மூன்று மாதங்களாக குறித்த மாகாணசபை உறுப்பினர்கள் அவை அமர்வுகளில் கலந்து கொள்ளவில்லை எனவும் எதிர்வரும் 19 ஆம் திகதி மேல் மாகாணசபை கூடும் போது குறித்த 12 மாகாணசபை உறுப்பினர்கள் தொடர் பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது. (ஓ-6)

# அதிகவிலையில் அத்தியாவசியப் பொருட்கள்; வியாபாரிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்த 2 ஆயிரம் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த மார்ச் மாதம் மாத்திரம் 2 ஆயிரத்து 750 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆயிரம் வியாபாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் 3.2 மில்லியன் ரூபா அபராதமாக அறவிடப்பட்டதாகவும் அதிகாரசபையின் தலைவர் கூறினார்.

மேலும் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நாடு முழுவதும் இது போன்ற சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன்பொருட்டு 75 புதிய அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

# அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல்-2010

**பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127ஆ ஆம் பிரிவின் கீழ் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள்**
**(வாக்காளர் அடையாளம்)**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது வாக்காளரொருவர் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு எட்டு வகையான அடையாள அட்டைகளிலொன்றைச் சமர்ப்பிக்க முடியுமென ஏற்கனவே தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்றையேனும் வைத்திருக்காத வவுனியா நலன்புரி நிலையமொன்றில் தற்காலிகமாக வசித்த வாக்காளரொருவர் நலன்புரி நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைச் சமர்ப்பித்து வாக்களிக்க ஏற்றுக்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகிறேன். எவ்வாறாயினும் சமர்ப்பிக்கப்படும் அடையாள அட்டை பின்வருமாறு வழங்கப்பட்ட திகதி இலக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

1. 2009.02.15 இற்கும் 2009.12.19 இற்கும் இடைப்பட்ட திகதி.
2. 150,000 இற்கும் 238,326 இற்கும் இடைப்பட்ட இலக்கம்.

கே.கணேஷ்
அரச அதிபர்

(சி/5031)


எமது பாசமிகு யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!
உங்களிடம் எமது அன்பான வேண்டுகோள்



பெரியண்ணன் (ஜோண்)



மகாலிங்கம் (மகாமினி)



தங்கவேலு



அராலி சந்திரன் (பகீதரன்)



கோணேஸ்வரன்



நீர்வேலி செல்வம்



அரியரட்ணம் (அரியம்)



ஸ்ரீதரன் (தோழர் சுகு)

மெழுகுவர்த்திக்கே உங்கள் வாக்கு, கடமை, கண்ணியம், நேர்மை, மனவுறுதி, துணிச்சல், தியாகம், கடின உழைப்பு, ஆகியவற்றை ஒருங்கே கொண்ட எமது வேட்பாளர்களுக்கே உங்கள் வாக்கு.



சிவா (சிவநாதன்)



ரவி (சி.தங்கராசா)



மோகன் (சிவராசா)



கங்கா (ஜெயக்குமாரன்)

- தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்கவும்
- மாகாண ஆட்சிக்கு சுயநிர்ணய அதிகாரங்களைப் பெறுவதற்கும்
- வடக்கு-கிழக்கில் நிலவும் இராணுவ ஆட்சியை நீக்கி குடிமக்கள் ஆட்சியை நிலை நாட்டவும்
- வடக்கு-கிழக்கில் கடத்தல்கள், பயமுறுத்தல்கள் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்
- வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் வளமான வாழ்க்கைக்காகவும் அயராது உழைப்போம்.

(1003)

X

போடுங்கள் புள்ளடி மெழுகுதிரிக்கே
பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி


# பாராளுமன்றத் தேர்தல் 2010

**என் அன்புள்ளம் கொண்ட கடற்றொழில் வாக்காளப் பெருமக்களே !**

வடபகுதியின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கிய கடற்தொழில், வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்திலும், பிற மாவட்டங்களில் இருந்துவரும் வருமானத்திலும் சிறப்பாக இருந்தது. கடந்த போர்க் காலத்தில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து, தொழிலும் பாதிக்கப்பட்ட உங்கள் வாழ்வை முன்னேற்ற பின்வரும் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

- மத்திய அரசின் உதவித் திட்டத்துடனும், உலக நாடுகளின் ஒத்துழைப்புடனும், குடாநாட்டின் கடல் பிரதேசங்களில் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் நவீன மயமான மீன்பிடித் துறைமுகங்களை குருநகர், பாசையூர், தீவுப் பகுதியின் மூன்று இடங்களிலும், வடமராட்சியில் மூன்று இடங்களிலும், வலிகாமம் மேற்கில் ஒரு துறைமுகமும், மயிலிட்டியில் ஒரு துறைமுகமும் கட்டுவதற்கான ஒழுங்குகள் எடுக்கப்படும்.
- குடாநாட்டின் கடலுணவு வகைகளை ஏற்றுமதி செய்து எமது பிரதேச கடற்றொழிலாளர்கள் அதிக வருமானம் ஈட்டுவதற்கு உதவும் வகையில் நவீன தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகள் அமைக்கப்படும்.
- கடற்றொழில் செய்வதற்கான அனைத்துவிதமான உபகரணங்களையும் முற்றுமுழுதாக எமது பிரதேசத்திலேயே தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் அமைப்பக்கப்பட்டு, அதனோடு தொடர்பாக மேலதிக வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடற்றொழிலாளர்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய வீடமைப்புத் திட்டங்கள், அவற்றைக் கட்டி முடிப்பதற்கான ஏற்பாடுகள் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் தொடங்கப்படும்.
- கடற்றொழிலாளர் சமூகம் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கான விசேட நடவடிக்கைகளும், மாணவர் கல்வி முன்னேற்றத்துக்கான பல்வேறு செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
- மீன்பிடித் தொழில் அபிவிருத்தி சம்பந்தமான ஆராய்ச்சிகள் மற்றும் கற்கைகளுக்கென விசேட கல்வி நிறுவனம் யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மீன்பிடி அமைச்சினூடாக உருவாக்கப்படும்.
- கடற்றொழில் சமூகத்தில் குடும்பத் தலைவர்களை இழந்தவர்களுக்கென விசேட தொழில்வாய்ப்புக்களும், குடும்பத் தேவைகளுக்கு ஏற்றவாறான மானியக் கொடுப்பனவுகள் மற்றும் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கான செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
- போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். எல்லா வேலைத் திட்டங்களிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**1999 ஜூன் 19ம் திகதிக்குப் பின்னர் 24 மணித்தியாலமும் எமது கடற்பரப்பில் தங்குதடையின்றிக் தொழில் செய்வதற்கான ஒழுங்குகளை உங்களுக்கு ஏற்படுத்தித் தந்து, பல கோடி ரூபா வருமானம் சேர்க்க வழிவகை செய்த நான் என்ற வகையில், எதிர்வரும் 5 ஆண்டுகளையும் வட பகுதி வாழ் மக்களின் நன்மை கருதியும், கடற்றொழில் சமூகத்தின் முன்னேற்றம் கருதியும், வெற்றிலைச் சின்னத்தக்குப் புள்ளடியிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு உங்கள் மூன்று விருப்பு வாக்குகளையும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**




ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய
அமைப்பாளர்





அலெக்ஸாண்டர்
சூசைமுத்து
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய
அமைப்பாளர்





கந்தசாமி
கமலேந்திரன்
(தோழர் கமல்)
தீவக வலய
அமைப்பாளர்




## கௌரவ அமைச்சர்
## கே. என். டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)





சந்திரகுமார்
முருகேசு
(தோழர் அசோக்)
முன்னாள்
பாராளுமன்ற
உறுப்பினர்




பசுபதி
சீவரட்ணம்
(தோழர் கி.பி -ஜீவா)
தேசிய
அமைப்பாளர்




முருகுப்பிள்ளை
சிறீபதி
முன்னாள் ஹாட்லிக்
கல்லூரி அதிபர்




சில்வேஸ்த்திரி
அலென்ரின்
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட
அமைப்பாளர்



**X**

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

(சி-5030)







யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக அச்சுவேலி மேற்கு கிராமத்தில் அமைக்கப்பட்ட மக்கள் சேவை நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் கே.கணேஷ் நிலையத்தை நாடாவெட்டி திறந்துவைப்பதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும், அரச அதிபர் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்வதையும், நிலைய வளாகத்தில் அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேசசெயலர் சி.ஏ.மோகன்றாஸ், உதவிப் பிரதேச செயலர் செல்வி பிரேமினி, கிராம அலுவலர் வீ.கோபாலதாஸ் மற்றும் ஏனைய விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(வேலணை)

வேலணை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி சிறி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் சித்திரைப் புதுவருடப் பிறப்பான எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை இரதோற்சவமும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4-22)

## பிரிவுபசார விழாவும் பாராட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஆசிரியரான திருமதி குமாரி மனோரதன் மற்றும் செல்வி. உதயகலா சிவபாதசுந்தரம் ஆகியோரின் 25 வருட கால சேவையினைப் பாராட்டும் விழாவும் பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழாவும் இன்று சனிக் கிழமை 12 மணிக்கு ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-4)

## திருத்த வேலைகள் முடிவுறாததால் பயணிகள் அசௌகரியம்

(கோப்பாய்)

கோப்பாய் கைதடி வீதியிலுள்ள பிரதான பாலத்தின் திருத்த வேலைகள் 2006 ஆம் ஆண்டில் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு அவ் வேலைக்குத் தேவையான பொருட்கள் பறிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் அன்று அமைக் கப்பட்ட தற்காலிக பாதையே இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏ9 வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் வீதியை கூடுதலான தென்பகுதி பஸ் வண்டிகள், பாரவூர்திகள் பயன்படுத்துவதால் பலத்த அசௌகரியங்களை அனைத்துத் தரப்பினரும் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஓ-79)

## சட்டவிரோதமாக சாராய விற்பனை

(கோப்பாய்)

கோப்பாயில் சில பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் தட்டிக்கேட்பார் யாருக்கு மற்ற நிலையில் சாராய விற்பனை நிலையங்கள் முளைந்து வருவதால் அப் பகுதியில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள், வீதியைப் பயன்படுத்துவோர் பலத்த அசௌகரியங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனை அண்டியுள்ள வீதிகளில் மது போதையில் செல்வோரின் அசிங்கமான நடவடிக்கைகள் பாடசாலை மாணவர்கள், தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஆலயங்களுக்கும் செல்லும் அடியார்கள் ஆகியோரின் போக்குவரத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக இக்கடைகளில் இளைஞர்களின் எண்ணிக்கையே கூடுதலாகவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ஓ-79)

## தனியார்துறை ஊழியர் நலனை மேம்படுத்தும் நோக்கிலான திடீர் தொழிற் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அதிகளவான ஊழியர்கள் தமக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டு பல்வேறு கஷ்ட நிலைமைகளினை எதிர்நோக்கி வருகின்றனர்.

அவர்களின் நலன்களினை கண்காணிக்கும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்ட உதவித்தொழில் ஆணையாளர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண நகரில் உள்ள பிரதான 18 நிறுவனங்களில் தொழில் பரிசோதனையை மேற்கொண்டு அங்கு பணிபுரிந்த 143 உழியர்கள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டதுடன் அவர்களினை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் சேர்ப்பிப்பதற்கும் உரிய நடவடிக்கையினை எடுத்துள்ளது.

மேலும் ஊழியர்களின் வேலைநேரம், வாராந்த விடுமுறை, பூரணை விடுமுறை, பகிரங்க விடுமுறை, சமயோசித விடுமுறை, ஓய்வு விடுமுறை தொடர்பாக சட்ட ஏற்பாடுகளிற்கு அமைய தொழிற்படுமாறும் அவை தொடர்பான பதிவேடுகள் பேணுமாறும் தொழில் தருநகர்களிற்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அத்துடன் இன்றைய தொழிற் பரிசோதனையின் போது பெரும்பாலான தொழில் தருநர்கள் ஒத்துழைப்பை வழங்கியமை சிறப்பான அம்சமாகக் கருதப்படுகின்றது. இப்படியான தொழில் பரிசோதனை தொடர்ச்சியாக யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவ லகத்தினால் முன்னெடுக்கப்பட இருப்பதால் தொழில்தருநர்கள் தொழிலாளர்களின் உரிமை நோக்கில் கூடுதல் கவனமெடுத்து தொழிற்படுவதுடன் மாவட்டத் தொழில் அலுவலகத்துடன் ஒத்துழைத்து செயற்படு மாறும் யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## வடக்கு மாகாண உள்ளூராட்சி பணியாளர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண உள்ளூராட்சி பணியாளர்கள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பொதுநூலக பிரதான நூலகர் ச.தனபாலசிங்கத்தின் தற்காலிக தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான முதலாவது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக சங்கானை பொது நூலக நூலகர் பா.விஜயகுமார், உபதலைவராக யாழ்.பொதுநூலக நூலகர் ஜோர்ஜ் ஜெஸ்ரின், செயலாளராக சுன்னாகம் பொது நூலக நூலகர் க.சௌந்தரராசன், உபசெயலாளராக ஆனைக்கோட்டை பொதுநூலக நூலகர் வின்சென்ற் குணாளன், பொருளாளராக யாழ்.பொதுநூலக நுலகர் செல்வி க. கிருபாகுமாரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக சாள்ஸ் நவரட்ணம் செயின்சாள்ஸ், திருமதி இ.சசிகலா, ஆ.தெய்வேந்திரம், இ.தருமலிங்கம், திருமதி விஜயலட்சுமி , கு.வைகுந்தவாசன் ஆகியோரும் மாவட்ட இணைப்பாளர்களாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி க. கணேசானந்தம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. ப.சிவதர்சினி, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பா. செல்வராணி, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ரி. அல்போன்ஸ், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ். பபிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-4-29)

## வல்வை.முன்பள்ளி கொத்தணியின் கண்காட்சி

(அல்வாய்)

வல்வெட்டித்துறை முன்பள்ளி கொத்தணியின் கண்காட்சி இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) காலை 9 மணி முதல் 4.30 மணிவரை யாழ்.சிதம்பராக் கல்லூரியில் முன்பள்ளி கொத்தணித் தலைவர் மு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விஅதிகாரி ப்ா.ரகுநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட முன்பள்ளி ஒன்றியத்தலைவர் எஸ்.ஜெ.செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக சிதம்பராக் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார், வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், வடமராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-19)

## ஈஸ்ரர் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யேசுநாதரின் உயிர்ப்பைக் குறிக்கும் ஈஸ்ரர் பெருவிழாவை நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்.மாவட்ட கிறிஸ்தவ மக்கள் யாவரும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றுவதுடன் மகிழ்வாகக் கொண்டாடவுள்ளனர்.

இதில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும் முதற் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும் இரண்டாவது திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ஓ)

## தவணைக் கட்டண புத்தகங்களை பெற்றுக்கொள்க

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமூகப் பாதுகாப்பு சபை ஓய்வூதிய திட்டத்தில் 2009 ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களது தவணைக் கட்டணப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் தமது புத்தகத்தை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## தமிழ்மொழி தினமும் நூலக சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் "தமிழ்மொழி தினமும் நூலக சஞ்சிகை வெளியீடும்" நாளை மறுதினம் திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.ராதா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)




## கோப்பாய் இராசவீதியில் பாதீனியம் செடி பரம்பல்

(வேலணை)

கோப்பாய் இராசபாதையில் இரண்டாவது கிலோமீற்றர் கல்லுக்கு அண்மையிலுள்ள சில தனியார் காணிகளில் பாதீனியம் செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இச் செடியை காணிகளில் வளரவிடுவது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இச் செடியை வளரவிடாது அழிப்பதற்கு ஆவன செய்வார்களா என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கோப்பாய் கிராமத்தில் பாதீனியம் செடியின் வளர்ச்சி முன்பு இல்லாதவாறு கூடுதலாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (6-22)

## பேச்சுத்திறன் காணும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்கும் பேச்சுத் திறன் காணும் வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை 8.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாலர் கல்விக் கழகத்தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் லயன்.எஸ். தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (6-9)

# இறைவனின் இயல்பான இசையும் நடனமும் நம்வாழ்வின் அக இயல்பை வெளிப்படுத்தும்



அன்னைத் திருவாயிலிருந்து வரும் தாலாட்டின் இனிய இசை வந்த திசையை நோக்கி நமது காதுகள் திரும்பின. நாம் கேட்கும் உணர்வு அப்பாடலினால் தான் முதன் முதலில் வளரத்தொடங்கியது. பிறப்பிலிருந்து இறப்பு வரை இசையே பின் தொடர்கிறது. இந்த வகையில் இசையும், நடனமும் அதற்கான சாஸ்திரங்களோடு மிகவும் ஒன்றிய கலைகள் ஆகும். தென்னிந்தியா இக் கலைகளுக்கு அழகும் ஆழமும் அளித்தது. சாஸ்திரங்களின் படி இசை என்பதில் நடனமும் அடங்கும். இசையைக்



கண்முன் கொண்டுவந்து நிறுத்துவது தான் நடனக்கலை. இவ்விரு கலைகளும் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இந்த இரண்டு மாபெரும் கலைகளும் இந்தியர்களின் வாழ்வில் ஒரு முக்கியமான பங்கு வகித்துள்ளன. மதம்,தத்துவம் ஆகியவற்றை பரவச்செய்யும் சாதனங்களாக அவை




நம் உள்ளங் களில் இடம் பெற்றுள்ளன.

நாடகம், நடனம், கச்சேரி, ஆலயம், வீடு, வாழ்க்கை ஆகிய ஒவ்வொன்றின், நாகரிகத்தையும் கலாசாரத்தையும்இசை செழிப்படையச் செய்துள்ளது. இந்த இசைப் ப்ாரம்பரியம் இருந்திராவிட்டால் நம் நாட்டு மக்களின் பாரம்பரியம்,வாழ்க்கை வெறும் சூனியமாக இருக்கும்.

தென்னிந்தியாவில் குழந்தைப் பராயத்திலே வீட்டில் இசைப்பயிற்சி அளிக்கப்படும் பழக்கம் இருந்ததால் இசைக்கலையை அதன் தரம் அறிந்து பாராட்டுவோரின் தொகை பெருகியது. இசை நமது இரத்தத்தோடு ஊறியிருக்கிறது. நம் வாழ்வில் அக இயல்பை வெளிப்படுத்தும் மூச்சுக் காற்று.

எந்த நாட்டினராலும் சரிஇசையை வெளியிடாமல் இருக்கமுடியாது. இந்தியா வைப் பொறுத்தவரையில்இது நூற்றுக்கு நூறு உண்மை.அங்கு அவர்களின் வாழ்வு இசையுடன் ஒன்றியிருக்கிறது.

உலகிலே மிகவும் தொன்மையான நூல் இராமாயணம் அதனை வால்மீகி முனிவர் சந்தமும், தாளமும் உடைய ஸ்லோகங்களாக இயற்றியிருக்கிறார். இராமனின் மைந்தர்களான குசனும், லவனும் ஆச்சிரமத்தில் வளர்ந்து வந்தபோது இராமாயணம் முழுவதையும் பாடம் செய்து இனிய குரலில் பாடி காட்டில் வாழ்ந்த முனிவர்களை மெய் மறக்கச் செய்தனர்.

நம் நாட்டில் இசையை மக்களின் ஆத்மா என்றும் எல்லா உயிரினங்களுடனும் பேச வல்ல ஒரே மொழி என்றும் கருதுகிறோம். ஆயர் குலத்தவரான கண்ணன் தனது கம்பீரத்தோற்றம் ஒன்றினாலேயே யாவரையும் கவரவல்லவன்.ஆயினும் மக்களின் உள்ளத்தைக் கவர அவன் குழல் ஊதி இசை மழை பொழிந்தான். அதன்மூலம் உயிர் வாழ்வன மட்டுமன்றி இயற்கைப் பொருட்களையும் தன்வசமாக்கினான்.

உணர்ச்சிகளை வெளிக்காட்டும் கலை தான் இசைக்கும் நடனத்துக்கும் தேவையான அடிப்படை அறிவு. இதனால் தான் இராகமுறைமை நமது இசையின் ஜீவநாடியாக விளங்குகின்றது. ஒலி - இனிமை தனிமனிதனின் உணர்ச்சிப்பாவத்தைப் பொறுத்தது.ஒவ்வொரு மனிதனும் ஆழ்ந்த - நுட்பமான உணர்ச்சிகளை ஆயிரக்கணக்கில் கொண்டவன். அந்த உணர்ச்சிகளும் ஒன்றோடொன்று மாறுபட்டவை. இந்தக் க்காரணங்கள் பற்றியே ராகமுறையுடைய இசைநமது உணர்வில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

நாயன்மார்களின் தோத்திரப் பாடல்களிலிருந்து, இஸ்சக் கலையின் நுட்பங்களுடன் இயற்றப் பட்டிருக்கும் இன்றைய பாடல்கள் வரையில் இறைவனின் குரலே இசை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டவையாக விளங்குகிறது.

சாஸ்திரிய சங்கீதத்தைப் போலவே சாஸ்திரிய நடனமும் தெய்வீக அடிப்படையுடையது. தென்னிந்தியாவில் ஆலயங்களைச் சார்ந்த தேவதாஸிகள் நடனக்கலையை அதன் தூய்மை கெடாமல் பாதுகாத்து வந்தனர். சதிர் எனப்படும் அவர்களது நடன நிகழ்ச்சி ஆலயங்களில் மட்டுமன்றி அரண்மனைகளிலும் வீடுகளிலும் கூட விஷேச காலங்களில் நடை பெறுவதுண்டு.

பல்வேறு காரணங்களால் இப்போது அவர்களின் நடனம் புகழ் இழந்து அநேகமாக நசிந்தே போய்விட்டது. ஆனால் அன்று நடனக் கலைநுட்பங்களில் தேர்ச்சி பெற்று, அக்கலையிடம் ஈடுபாடு கொண்ட தேவதாஸிகள் இருந்தனர்.அவர்கள் ஆலயங்களில் ஆடக்கிடைக்கும் வாய்ப்பை இறைவனுக்கு தங்கள் கலையை அர்ப்பணிக்கும் வாய்ப்பாகக் கருதினர். வேறு எந்த நோக்கமும் அவர்களுக்கு இருந்ததில்லை. ஆனால் சமூகமும் தேவதாஸிகளின் புனிதமான தொண்டில் களங்கத்தைப் புகுத்தி, அவர்கள் வளர்த்து வந்த அருங்கலையைக் கிட்டத்தட்ட அழித்துவிட்டது.

பரத நாட்டியத்தின் நுட்பங்களைப் பின்பற்றி நடன நாடகங்களும் தோன்றின. தஞ்சாவூர், கூசிபூடி போன்ற இடங்களில் தோன்றிய இத்தகைய நடன நாடகங்கள் புரோகிதர் இனத்தைச் சேர்ந்த ஆண்களால் ஆலயங்களில் ஆடப்பட்டு வந்தன.

எல்லாக் குறவஞ்சிகளும் ஒரே கருத்துடையவைதாம். அதாவது மானிட ஆன்மா கதைத் தலைவியாக உருவகப்படுத்தப்பட்டு இறைவனை அடைய விழைவதே குறவஞ்சியின் உட்பொருளாக இருக்கும். இப்போது நமக்கு கிட்டியுள்ள குறவஞ்சிகளுள் ஒன்று பதினெட்டாம். நூற்றாண்டில் 'திரிகூட ராசப் பகவிராயர்" என்பவரால் குற்றாலத்தில் இயற்றப்பட்டது. இதுதான் தொன்மையானதும் மிகச்சிறந்ததும் ஆகும்.

ஆலயங்களில் ஆடப்பட்டு வரும் மற்றொரு "குறவஞ்சி" ஸரபோஜி மன்னரின் பெருமைகளை விளக்கும் கேரளத்தில் கதகளி நடனம் பிரபலமாகி வந்தது. கதகளி பரத நாட்டியத்துடன் தொடர்பு கொண்டது தான் என்றாலும் கேரளத்தில் அன்று ஆடப்பட்டு




வந்த வேறு ஏதோ ஒரு நடனத்திலிருந்தே அது தோன்றியி ருக்க வேண்டும்.நான்கு வகை அபிநயங்களும் நிறைந்தது கதகளி நடனம் அதை நடனம் என்பதை விட நாடகம் என் றே சொல்லலாம்.

பலதரப்பட்ட அந்நிய படையெடுப்பாளர்களின் செல்வாக்கினால் தான் இசையில் வடநாட்டு பாணி தென்னாட்டு பாணி என்ற பிரிவு ஏற்பட்டது. மொகலாயர்களின் செல்வாக்கு வடநாட்டில் அதிக மாக இருந்தது. ஆதலால், அந்தப் போக்கு வட இந்தியாவின் கலைகளில் படிந்தது. வடநாட்டின் புகழ் பெற்ற பாடகர்களில் பலர் முகமதியர்களே.

கதகளி, மணிப்புரி, கதக் போன்ற எல்லா நடனங்களுக்கும் எப்படி பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் தோற்றுவாயாக விளங்குகிறதோ, அவ்வாறே இசையின் பிரிவுகள் அனைத்தும், ஒரே தோற்றுவாய் உடையவைதாம்.

அந்த அந்தப் பிராந்தியத்தில் பாடப்பட்டு வந்த இசையோடு இந்த மூல இசை இணைவு பெற்றதால்இசைக்கலையில் பல பிரிவுகள் ஏற்பட்டன. உதாரணமாக பழங்காலத்தில், ஒரிஸ்ஸாவில் பழக்கத்தில் இருந்த இசையும் நடனமும் வட இந்திய பாணியை விட தென்னிந்திய பாணியைத்தான் அதிகமாகக் கொண்டிருந்தன.




ஒரிஸ்ஸாவின் கலை அமைப்பும் பல அம்சங்களில் ஒற்றுமை உடையதாக இருந்ததே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.முன் காலத்தில் ஒரிஸ்ஸா மக்களில் பலர், தென் கிழக்கு ஆசியாவில் குடியேறினர். அவர்க ளுடைய ஆதிக்கம் அங்குள்ள கலைகளுக் கும் பரவியது. இதன் பயனாக இன்று யாராவது கம்போடியாவுக்கோ, அதன் அண்டை நாடுகளுக்கோ, சென்று பார்த்தால் அங்கே நடைபெறும் நடனங்கள் தென்னாட்டு நடனங்களிலிருந்து தோன்றியவை என்பதைத் தெளிவாக உணர்வார்கள்.

இசையாகட்டும், நடனமாகட்டும் தன் ஜீவனாடியை இழந்துவிட்டால் நீடித்து நிற்காது. வெறும் மதிநுட்பத்தின் மூலமும் திறமை மூலமும் மட்டும் இசையையும் நடனத்தையும் வேரூன்றச் செய்யமுயன்றால் அவை சம்பிரதாயங்களாகவும் அலுப்பூட்டுபவைகளாகவும் ஆகிவிடும்.

இசைவிஷயத்தில்நம்நாடு முழுவதும் ஒருமைப்பாடு கொண் டிருப்பதற்கு முக்கிய காரணம் அதை நாம் பக்தி செலுத்து வதற்கு ஏற்ற கருவியாக்கிக் கொண்டது தான். இந்தியர்கள் பக்தி மார்க்கத்திற்கு பெயர் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் பக்தியை இசையின் மூல



செல்வி சிவறூபி ஸ்ரீஜெகநாதன்
சண்டிலிப்பாய்

மும், நடனத்தின் மூலமும் வெளியிட்டார்கள். நடனக்கலை, நடத்தை கெட்டவர்கள் கையாளும் நிலைக்கு வந்த போது அது நசிந்துபோயிற்று.

தன்னை மறந்த அர்ப்பணமே இத்தகைய கலைகளின் தாரக மந்திரம். திறமையோ பணமோ கலைகளை மேம்பாடடையச் செய்துவிடமுடியாது. எனவே இசை யோடு ஒன்றியது நடனக்கலை இவை இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரித்துவிட முடியாது. ✠



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விழா நிகழ்வில் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, விரிவுரையாளர்களான கலாநிதி செ.திருநாவுக்கரசு, ச.லலீசன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் இடம்பெற்ற நாடகமொன்றின் காட்சி ஒன்றையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பெண்களின் திறன்கள் வெளிவருவதற்கு பெண்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும்

## மக்களின் மத்தியில் பத்மினி சிதம்பரநாதன் உரை

பெரும் போர் அனர்த்தத்திற்கு முகங் கொடுத்த எமது தமிழ்ச்சமூகத்தை மீளக் கட்டியெழுப்பி தமிழ்ச் தேசத்தை நிர்மா ணிக்கும் முயற்சியில் நாம் முன்செல்ல வேண்டும். இப்பணியை நாம் மிகுந்த அவதானத்தோடும் கெட்டித்தனத்துடனும் கற்பனையுடனும் இந்தப் பணியில் நாம் ஈடுபட வேண்டும்.

இந்த முயற்சியில் நமது சமூகத்தில் பாதிப் பகுதியினராக விளங்கும் பெண்களின் பங்கு இன்றியமையாதது. நாடும் சமூகமும் வளரப் பெண்கள் பங்களிக்கும் போது அந்த வளர்ச்சியின் பண்பு வித்தியாசமானதாகவிருக்கும். பெண்கள் ஒரு பிரச்சினையை அணுகும் விதத்திலும் தீர்க்கும் விதத்திலும் வித்தியாசம் இருக்கும்.

ஒரு சமூக வளர்ச்சிப் பாதையில் பெண்களின் சக்தியை மீளக் கட்டியெழுப்பும் முயற்சி அத்தியாவசியமானது. இன்று உலகத்தில் நாகரிகம் அடைந்துவரும் ஒரு கருத்து, சமூக மேம்பாட்டுப் பணிகளிற் பெண்களும் ஈடுபட வேண்டும் என்பதாகும். பாராளுமன்றம் செல்வோர்களில் முப்பது வீதமாவது பெண்களாக இருக்க வேண்டுமென்று கருதி பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்றிட்டங்களை நடத்துகின்றன. நாம் ஏற் கனவே சொன்னது போல் எமது பாரம்பரியத்தில் பெண் சக்தியுடையவளாக விளங்கியிருக்கிறாள். அவளைச் சக்தியுடையவளாக வைத்திருப்பதற்கு உகந்த முறைமைகள் எமது பாரம் பாரியத்தில் இருக்கின்றன. அவற்றை மீள் கண்டு பிடிப்புச் செய்து நாம் பயன்படுத்திய போது அவற்றில் படிப்படியாக வெற்றியைக் கண்டு வந்தோம்.

நான் பாராளுமன்ற உறுப்பினரானதும் பெருமளவு பெண்களோடு வேலை செய்வதற்கான சாத்தியம் உருவானது. எமது பெண்கள் பண்பாட்டு மையத்தின் உயிர்ப்பூக்குனர்கள். கிராமம் கிராமமாக வீடு வீடாகச் சென்று வீடுகளிற்குள் முடங்கிக் கிடந்த பெண்களோடு தொடர்பு கொண்டனர். இதனால் உற்சாகம் பெற்ற பெண்கள் ஒன்றுகூடுவதற்காக *பெண்கள் ஜனநாயக அரங்கம்* ஒன்றை நாம் உருவாக்கினோம். இந்த அரங்கம் பெண்களை வலுப்படுத்தும் ஒரு சாதனமாக விளங்கியது . தமது வெட்கம், பயம் நீங்கியதென்றும் தமது ஆற்றலை தாம் உணர்ந்து கொண்ட தாகவும் இவ்வரங்கில் கலந்துகொண்ட பெண்கள் கூறினர். தாம் தொழிலில் ஈடுபடும் ஊக்கத்தைக் கட்டினார்.




## பொதுத் தேர்தல்-2010

நான் எனது பாராளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஐந்து இடங்களில் தீவகம் , வலிகாமம் , வடமராட்சி, தென்மராட்சி ,யாழ். நகர் பகுதிகளில் 5 சிறு கைத்தொழில் நிலையங்களை அமைத்தோம். இதில் கிட்டத்தட்ட 100 பெண்கள் தொழில் முயற்சியாளர் ஆனார்கள். இந்த நிலையங்கள் வெறுமனே தொழில் நிலையங்களாக மட்டுமல்லாமல் அந்தந்த கிராமங்களில் பெண்கள் கூடுகின்ற இடமாகவும் செயற்பட்டது. அவர்கள் அந்த இடங்களில் கூடி தமது மன உணர்வுகளை பகிர்ந்துகொள்வதும் தமக்கிடையே உறவை வளர்ப்பதும் அந்த உறவு நிலையில் நின்று கிராமத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும் இந்த நிலையத்தில் சாத்தியமானது.

இதனால் இந்த நிலையம் சமூக மாற்றத்திற்கான மையமாகவும் விளங்கியது. ஆனால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட யுத்தம் காரணமாக இந்த வேலைகள் எல்லாம் இடைநடுவில் கைவிடப்பட்டவையாகின்றன. இன்று மீண்டும் இந்தப் பெண்களைச் சந்திக்கின்ற போது தமது பழைய அனுபவங்களை நினைவு கூறுகின்றனர்.

நாங்கள் கட்டியெழுப்பி வந்த வேலைகள் இடைநடுவில் சிதைக்கப் பட்டது பற்றி நானும் அந்தப் பெண்களும் கவலைப் படுகின்றோம். மீண்டும் நாங்கள் அவ் வேலைகளைத் தொடங்க வேண்டும். இந்த வேலைகள் பற்றிய கதைகளைச் சொல் லுகின்ற போது



அந்த பெண்கள் மட்டுமல்ல ஏனைய பெண்களும் உற்சாகம் அடைகின்றனர்.

இத்தகைய வேலைகளை நாம் மீண்டும் செய்வோம் என்றும் பெண்களை வலுப்படுத்தி தேச வளர்ச்சியில் பெண்களின் பங்கையும் ஈடுபடுத்த வேண்டும் என்று கோருகின்றனர்.

இதற்காகப் பெண்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும் என்பது அவர்கள் விருப்பம் என்றார். (ந)

# தமிழ் மக்களிடம் இன்று இருக்கும் ஒரே ஆயுதம் வாக்குகள் தான்!

## பிரசாரக்கூட்டத்தில் பொ.ஐங்கரநேசன்

இலங்கைத் தீவின் அரசியல் அரங்கில் தமிழ் மக்களின் ஆயுத பலம் அழித்தொழிக்கப்பட்டு விட்டது. நிர்க்கதியாகவுள்ள தமிழ் மக்களிடம் இன்று இருக்கும் ஒரே ஆயுதம் அவர்களது வாக்குகள் தான். நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலின் போது நீங்கள் அனைவரும் அவற்றைப் பிரயோகிக்க வேண்டும். மற்றவர்களையும் வாக்களிக்க வைக்க வேண்டும். வாக்களிப்பதை ஒரு தேசியக்கடமையாக நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு திருநெல்வேலி பத்ரகாளி கோவில் முன்றலில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற வேட்பாளர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இதனை நீங்கள் செவ்வனே செய்வீர்களாயின் வாக்களிப்பு வீதம் உயர்வடையும். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தனை ஆசனங்களையும் கைப்பற்றும் சாதகமான நிலை தோன்றும். யாழ் மாநகர சபைத்தேர்தலின் போது வாக்களிப்பதில் நகரஅதிக ஆர்வம் காட்டவில்லை. யாழ்ப்பாணத்தையும் நல்லூரையும் சேர்ந்த அதிகமான மக்கள் வாக்களிக்கச் செல்லவில்லை. அதனைச்



செய்யத்தவறியதால் தான் இன்று நல்லூரின் புனிதம் பறிபோய்க்கொண்டிருக்கிறது திருவிழாக் காலங்களில் மாத்திரமே நல்லூரில் கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு வந்த நிலையில் இப்போது தென்னிலங்கைக் கடைகள் நல்லூர்ப் பகுதியில் நிரந்தரமாகவே குடியேறிவிட்டன.

நல்லூரில் மிகப்பெரிய சுற்றுலா விடுதி அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. நல்லூர், அங்கே ஆலயம் இருப்பதால் மாத்திரம் சிறப்புப் பெறவில்லை. அது, சங்கிலிய மன்னனின் தலைநகரம். தமிழ் மக்களின் வரலாற்றுத் தொல்லியல் அடையாளங்களைச் சுமந்து நிற்கும் பிரதேசம். இவற்றை மலினப்படுத்தும் அல்லது சிதைக்கும் முயற்சியாகவே நல்லூர் குறிவைக்கப்படுகிறது. யாழ் மாநகரசபை நிர்வாகம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினிடம் இருந்திருக்குமானால் இந்த அவலம் நேர்ந்திருக்காது. இதை உணர்ந்து நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை ஒரு தேசிய இயக்கமாகவே முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து வருவதாக அரசு கூறுகின்றது. வீதிகளுக்குத் தார் பூசுவதும் சுற்றுலா விடுதிகள் அமைப்பதும் வங்கிக் கிளைகளைத் திறப்பதும் அபிவிருத்தியல்ல. அபிவிருத்தி என்பது எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அதே சமயம் எமது இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுரிமைகளையும் பாதுகாக்கும் நிலைத்த மேம்பாடாக இருக்கவேண்டும்.

இன்று எமது இயற்கைச்சூழலும் பண்பாட்டுச் சூழலும் மிக மோசமாகச் சீரழிந்து வருகின்றது. எமது தாயக நிலப்பரப்பை ஆளுகின்ற அரசியல் அதிகாரம் எம்மிடம் இருந்தால் மாத்திரமே இவற்றைத் தடுக்க முடியும். அபிவிருத்தியையும் சரியான திசையில் முன்னெடுத்துச் செல்லமுடியும் என்றும் தெரிவித்தார். (ந)

# இலங்கை- இந்தியா சதியை முறியடித்துக்காட்டுங்கள்

## சட்டத்தரணி கனகநமநாதன் உரை



தேர்தலில் பல சுயேட்சைக்குழுக்களை களத்தில் இறக்கியிருப்பதும் தென்னி லங்கை பேரினவாத கட்சிகள் முழு மூச்சுடன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மூன்றாக பிளவுபட்டு தேர்தலில் நிற்பதுமான விடயங்களையிட்டு மக்கள் வீண் குழப்பமடையவேண்டாம் என தமிழ்த்தேசியக் விடுதலைக்கூட்டமைப்பின் நல்லூர் தொகுதிக்கான வேட்பாளர் கனகநமநாதன் தெரிவித்தார். தம்பாளையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் ,

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஒரே அணியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என போட்டியிட்டதால் வடக்கு- கிழக்கில் 22 ஆசனங்களையும் பெற்று ஒரு புரட்சி செய்ததை எப்படியாவது இத்தேர்தலில் தவிடு பொடியாக்கிவிட வேண்டும் என இலங்கை அரசும் இந்திய அரசும் திட்டமிட்டு இறங்கி யுள்ளன.

இந்திய அரசும் தனது பங்கிற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை மூன்றாக உடைத்துள்ளது. தமிழ்த்தேசியத்தில் இறுக்கமான நிலைப்பாட்டை கொண்டிருந்து போரில் ஈடுபட்டிருந்த இரண்டு சிங்களத் தலைவர்களுக்கும் ஜனாதிபதித்தேர்தலில் வாக்குப்போட வேண்டாம், தமிழர் ஒருவர் கேட்கவேண்டும், தமிழரின் தனித்துவம் காக்கப்படவேண்டும் என ஜனாதிபதித் தேர்தலில் குதித்த சிவாஜிலிங்கம் -ஸ்ரீகாந்தா ஆகியவர்களை கூட்டமைப்பின் மூலம் முதலில் ஒதுக்க நினைத்த இந்திய அரசு அதில் வெற்றி கண்டது. பின்னர் புலிகள் இயக்கத்தின் சிபாரிசின் மூலம் கூட்டமைப்பில் இடம்கிடைத்த பத்மினி சிதம்பரநாதன் , செல்வராசா கஜேந்திரன் , சொலமன் ஸ்ரீல் ஆகியோரை வெளியேற்ற வேண்டும் என இந்தியா கூறியபடி அவர்கள் அகற்றப் பட்டார்கள். ஏன் அவர்களை அகற்றினீர்கள் என கேள்வி கேட்டு தானும் வெளியேறினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இவ்வாறு தான் இலங்கை-இந்திய அரசுகளின் கூட்டுச்சதிக்கு தேர்தல் களம் ஆளாகியுள்ளது எனவும் குறிப்பிட்டார். சுயேட்சைகளை அலட்சியம் செய்வதன் மூலம் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பாகிய எங்கள் கட்சியை அமோக ஆதரவு தந்து வெற்றியடைச் செய்வதன் மூலம் இந்திய அரசுக்கும் பாடத்தைப் புகட்டுங்கள் என்றார். (ந)

# எமது வரலாற்றுச் சிறப்பைப் பேணும் நல்லூரில் 4 நட்சத்திர ஹோட்டலா?

## பேராசிரியர் இரா.சிவசந்திரன் கேள்வி



நல்லூரில் நட்சத்திர ஹோட்டல் கட்டப்படுவது எமது கலாசாரத்தை அவமதிக்கும் செயல் என யாழ் மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் நாவாந்துறை சனசமூக முன்றலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் தமக்கு ஆதரவு இல் லாத நிலையில், அரசாங்கம் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்கின்றோம் என்று கூறி வாக்கு பறிக்கும் வேலையை மத்திய வங்கி ஆளு னர் அஜித் நிவாட் கப்ரல் ஊடாக அவசர அவசரமாக 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றியுள்ளது.

*ஹோட்டல் நல்லூர்* என பெயரிட்டு நான்கு நட்சத்திர ஹோட்டல் ஒன்றை கட்டுவதற்கான அத்திவாரக்கல் நாட்டும் விழாவை நடாத்தியுள்ளது. இவ் விழாவில் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் இராணுவ அதிகாரிகள் பங்கு கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

நல்லூர் இராசதானியின் நினைவுச் சின்னங்களான சங்கிலியன் வளைவு, மந்திரி மனை சட்டநாதர் சிவன் கோவில் என்பவற்றுக்கு அருகில் நூறு யார் தூரத்தில் இந் நட் சத்திர ஹோட்டல் அமைக்கப்படவுள்ளமை யாழ் கலாசாரச் சீரழிவின் அத்திவார இடுகை என யாழ்ப்பாண மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

அநுராதபுரம், பொலனறுவையில் கலா சார முக்கோணங்களை அமைத்து தமது வர லாற்றுச் சின்னங்களைப் பேணிவருகின்ற சிங்கள அரசு இங்குள்ள கலாசார மையத்தில் நான்கு நட்சத்திர ஹோட்டல் கட்டுவது எமது கலாசரச் சீரழிவுக்கான ஆரம்பம் என்பதை தமிழ் மக்கள் புரியாமல் இல்லை. இவர்கள ஹோட்டல் கட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் வேறு இடம் இல்லையா? கடற்கரைகள் சூழவுள்ள யாழ் குடாநாட்டில் பொருத்தமான இடத்தை தெரிந் திருக்கலாம் அல்லவா? என்றார். (ந)

# என்ன விலை கொடுத்தேனும் முள்ளிவாய்க்கால் மக்களை காப்பாற்ற வேண்டும்

**14.05.2009 அன்று வீ.ஆனந்தசங்கரியால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்**



**மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,**
**ஜனாதிபதி, அலரி மாளிகை**

**மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு,**

முக்கிய விடயத்துக்கு வருமுன்பு இந்நாட்டில் எனக்குள்ள பற்றும் அபிமானமும் வேறு ஒரு இலங்கையருக்கு இருப்பதிலும் பார்க்க எவ்வகையிலும் குறைந்ததல்ல என்பதை மீண்டும் வலியு றுத்தி கூற விரும்புகின்றேன்.

தன் நாட்டை மட்டும் நேசிப்பவன் நாட்டுப்பற்றாளனாகி விட முடியாது. நாட்டையும் அந்நாட்டு மக்களையும் அதாவது, சிங்களவர் , தமிழர் , இஸ்லாமியர் அல்லது வேறு இனத்தவர் என்ற பாகுபாடு காட்டாத ஒருவர் தான் தேச பக்தனாவார். இந்த யுத் தத்தை வென்றெடுக்க அரசு பெரும் விலை கொடுத்தது. ஏற்பட்ட பொருள் நஷ்டத்துக்கு மேலாக நம் நாட்டு பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் நாம் இழந்த பெறுமதிமிக்க பல உயிர்கள், தாங்க முடியாத மக்கள் அனுபவித்த மனித உபாதைகள் ஆகியவற்றின் பெறும தியை கணக்கிட முடியாது.

இரு முழு மாவட்டங்கள் மற்றும் மூன்று மாவட்டங்களின் பகுதிகள் ஆகியவற்றில் வாழ்ந்த மக்கள் தம் உடமைகள் அத்தனையையும் முற்றாக இழந்து விட்டனர். அநேகர் தமது ஆடம்பர வாழ்க்கையை இழந்துள்ளனர். சொந்த வியாபாரம், கைத்தொழில், பெருமாளிகைகளை ஒத்த வீடுகள் , மேலும் தமக்கு விரும்பி யவற்றையும் வேண்டிய வளங்களையும் பெற்றிருந்தனர்.

இன்று அவர்கள் அனைவரும் ஓட்டாண்டிகளாகி விட்டனர். அவர் கள் பட்டினியும் போடப்பட்டுள்ளனர். வன்னியில் அவர்கள் நீண்ட நேரம் நீண்ட வரிசையில் தம் பாத்திரத்தில் கொஞ்சம் கஞ்சி ஊற்றப்படும் வரை காவல் நிற்கின்றனர். மொத்தத்தில் அவர்கள் நீராகரத்துடன் வாழ்க்கையை நடத்துகின்றனர். முதியவர்கள் சிலரின் பிரேத பரிசோதனையில் அவர்களின் மரணத்துக்குரிய காரணம் பட்டினிச்சாவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது தமிழர்களுக்கென அனைவரும் ஒரேதரத்தில் வாழக்கூடிய வர்க்கபேத மற்ற தான சமூகமொன்று உரு வாகியுள்ளது.

தற்போதைய முள்ளிவாய்க்கால் வாழ்க்கை மிகக் கொடூரமானது. புதிதாக ஓர் சூனியப் பிரதேசம் உருவாக்கப்பட்டாலும் விடுதலைப்புலிகள் அதற்குள் புகுந்து மக்க ளுடன் கலந்து நிற்பதை யாராலும் தடுத்து விட முடியாது. நான் அறியும் செய்திகளை உண்மையென நம்பினால் மட்டுமே அவற்றை தங்களின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டிய கடமை எனக்குண்டு.

இம் மாதம் 12.05.2009 அன்று முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் செல் வீழ்ந்து சிதறியதால் 36 நோயாளிகளுக்கு மேல் கொல்லப்பட்டும் பலர் காயமும் அடைந்தனர். மீண்டும் 13.05.2009 அன்று அதே வைத்தியசாலையில் செல் வீழ்ந்து வெடித்ததில் 50 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இவர்கள் இரு நாட்களாக நெருக்கடி காரணமாக சிகிச்சை அளிக்க யாரும் இல்லாது துன்பப்பட்டுக் கொண்டிருந்த பெருந்தொகையினரில் ஒரு பகுதியி னராவர்.

மேலும் பலர் காயமடைந்துமுள்ளனர். இந்த வேதனையோடு பட்டினியையும் அனுபவிக்கின்றனர். இந்நிலை தொடராது உடன் நிறுத்தப்படவேண்டும். மக்களுக்கு உடன் நிவாரணம் கிடைக்கக்கூடிய ஒரு விட யம் தங்கள் கையில் உண்டு. உடனடியாக அரச அதி காரிகளால் தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிபர அடிப் படையில் தேவையான உணவு வகைகளைக் கொண்ட கப்பல் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் மக்களை அரசு பட்டினி போடுகிறது என்ற குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

விடுதலைப்புலிகளின் அழுத்தத்தால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபர அடிப்படையில் கால்நூற்றாண்டுக்கு மேல் வன்னிக்கு உணவு அனுப்பி வந்த அர சுக்கு எஞ்சியுள்ள ஒன்றரை இலட்ச மக்களுக்கு தொடர்ந்து உணவு வழங்கினால் அரசு வங்குரோத்து நிலையை அடைந்துவிடாது. இந்தநிலை இன்னும் சில காலத்திற்கே. அது சில நாட்களாகவோ அல்லது மாதங்களாகவோ இருக்கலாம். வன்னி வாழ் மக்கள் நடக்கும் சக்தியை இழந்துவிட்டனர்.

குழந்தைகள் பாலின்றி பட்டினி கிடக்கின்றனர். வன்னிக்கு அரசு அனுப்பும் உணவு பண்டங்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை நீங்கள் அறியாததல்ல. அந்த விடயத்தை புறந்தள்ளி விட்டு எடுப்பவர்கள் தம் தேவைக்கு எடுத்ததன் பின் எஞ்சியவை அங்கே வாழும் மக்களுடைய வயிற்றை நிரப்பும் அளவுக்கு போதியதாக இருக்கவேண்டும். இந்நிலை யுத்தம் முடியும் வரை தொடர வேண்டும்.

அரச படைத்தரப்பினரும், அரசும் பல இழப்புக் களின் மத்தியில் சம்பாதித்த நற்பெயரை காற்றுடன் பறக்க விடக்கூடாது. கடந்த 2 ,3 வாரங்களாக பெருந் தொகையான உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந் நிலை யாரால் ஏற்பட்டது என்பதல்ல முக்கியம். ***இது ஏன் நடந்தது, எப்படி நடந்தது*** என்று எதிர்கால சந்ததி மீண்டும் மீண்டும் குரல் எழுப்ப இடமளிக்கக் கூடாது.

தயவு செய்து சம்பந்தப்பட்டவர்களில் ஒரு உயிர் தன்னும் இந்த மீட்புப்பணியால் இழக்கப்படக் கூடாது என கண்டிப்பானதொரு உத்தரவைப் பிறப்பிக்கவும். தாங்கள் அண்மையில் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் ஓர் உயிர் தன்னும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பறிக்கப்படக்கூடாது என குறிப்பிட்டமைக்கு அமைவாகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

தங்களால் மேற்கொள்ளப்படும் சகல நல்ல நடவடிக்கைகள் அனைத்திற்கும் எனது குறைவற்ற ஆதரவு கிடைக்கும் என உறுதியளித்து எவ்விதத்திலேனும் தேவையான உணவை பசியால் வாடும் முள்ளிவாய்க்கால் மக்களுக்கு உடன் அனுப்பி வைப்பதோடு சகல விதமான ஆயுத தாக்குதல் மக்கள் மீது தொடராது அவர்களை காப்பாற்றும்படி வலியுறுத்திக்கேட்டுக் கொள்கிறேன்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ


**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1

(சி/5023)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...


**இலைத் தத்திகள்** (Leaf hoppers)

பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் தத்தி வகைகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று மர தத்திகள் ( Plant hoppers) மற்றையது இலைத் தத்திகள் ( Leaf hoppers) ஆகும். நெற்பயிரில் தத்தி எரிவினை ஏற்படுத்துகின்ற கபில தத்திகள் அல்லது கபில மரத் தத்திகள் ( Brown plant hoppers) பற்றி சென்ற வாரம் பார்த்தோம். இவ்வாரம் இலைத் தத்திகள் பற்றியும் அவற்றினால் ஏற்படும் சேதம் பற்றியும் ஆராய்வோம்.


**பச்சை இலைத்தத்தி**
(Green Leaf hopper)

பொதுவாகவே குத்தியுறிஞ்சும் வாயுறுப் பையுடைய இவ்வாறான தத்திகள் இலையிலுள்ள சாற்றை குத்தியுறிஞ்சும் வல்லமையுடையன. அளவில் சிறியனவாக இருப்பினும் இத் தத்திகளை வெற்றுக் கண்ணினால் அவதானிக்க முடியும். பச்சை நிறமுடையதால் பச்சை இலைத்தத்தி என அழைப்பினும் முன் இறகின் நுனிப்பகுதி கறுப்பு நிறமாகவும் முன்னிறகின் நடுப்பகுதியில் கறுப்பு புள்ளியையும் கொண்டிருக்கின்றன. அரை குறையான உருமாற்றத்தை வரமாகப் பெற்றிருக்கும். இத்தத்திகள் அதிக எண்ணிக்கையில் பெருக வாய்ப்பளித்து விட்டால் பின்னர் அவை தயவு தாட்சண்ணியமின்றி முழு நெல் வயலையுமே சாற்றை உறிஞ்சுவதன் மூலம் நெற்பயிரினை வலிமையிழக்கச் செய்து விடுகின்றன. கடுகு சிறிதானாலும் காரம் பெரிதல்லவா.

முன்னர் குறிப்பிட்டது போல அரைகுறை உருமாற்றத்தை (Hemi metarphosis) உடைய இத்தத்திகள் முட்டை → அணங்கு → நிறைவுடலி என்னும் மூன்று பருவ நிலைகளை உள்ளடக்கியிருக்கின்றன. இதிலே முட்டையைத் தவிர்த்துப் பார்த்தால் அணங்கும் (Nymph)நிறைவுடலியும் மிகவும் சுறுசுறுப்பானதாகவும் இலையிலிருந்து சாற்றை விரைந்து குத்தியுறிஞ்சுவனவாகும். தத்திகள் அல்லவா இங்கும் சேதம் ஒருமிக்க ஏற்படுத்தப்படும் போது தத்தி எரிவு என்னும் சேதத்தை ஏற்படுத்தும். கபில மரத் தத்திகளினால் ஏற்படுத்தப்படும் சேதத்துக்கிணையாக இல்லாது விட்டாலும் இவற்றினது பங்களிப்பு மறைமுகமாகவும் நெற்பயிரில் இருக்கின் றது.



வாழ்க்கை வட்டம்


பச்சையிலைத் தத்தி நிறைவுடலி

நெற்பயிரில் குத்தி சாற்றை உறிஞ்சுவதை நேரடியான சேதம் எனக் கருதினால் மறைமுகமாக வைரசு நோயைப் பரப்பும் காவிகளாகவும் தொழிற்படுவதைக் குறிப்பிட லாம்.

நெற்பயிர் பாரியளவில் சேதத்தை ஏற்படுத்தும் வைரசு நோய்களான மஞ்சள் குட்டைப்பயிராக (Yellow dwarf) மஞ்சளாக மாற்றமடைதல் (Transitory Yellowing) என்பனவற்றின் வைரசுகளுக்கு காவி (Vector) ஆக தொழிற்படுகின்றன. இப் பச்சையிலை தத்திகள் நெல்லில் துங்குரோ வைரசு நோயையும்பரப்பும் காவிகளாகவும் தொழிற்படுகின்றன. இப்போது நீங்கள் வினவுவது புரிகின் றது. கபிலத்தத்திகளும் Grassy stunt எனும் வைரசு நோயைக் காவுகின்றன என அறியப்பட்டுள்ளது.

***விஞ்ஞானம் கற்கும் மாணவரே கவனியுங்கள்!***

பெண் பச்சையிலைத் தத்திகள் இலையினுடைய மேற் பரப்பினுள்ளே முட்டைகளை இடும். ஏறக்குறைய 50 முட்டைகளை ஒரு பெண்தத்தி இடும் வல்லமையுடையது. இப் பச்சையிலைத் தத்தியினுடைய வாழ்க்கை வட்டம் 25 நாட்களாகவும் அதில் முட்டைப் பருவம் 6-7 நாட்களும் அணங்குப் பருவம் 18 நாட்களுமாகும். இப் பச்சையிலைத் தத்திகளுக்கு நெபோரெற்றிசு வைறென்சு எனப் பெயரிட்டுள்ளனர். இவை சாறு உறிஞ்சும் பூச்சியினமாதலால் வருணம் கெமிப்தீராவினுள் உள்ளடக்கப்படுகின்றன.

பச்சையிலைத் தத்திகளுடன் சேர்த்து வெண் தத்திகள், ஒரேஞ்ச் தத்திகள் மற்றும் Zigzag தத்திகள் எனப்பல வகையுண்டு. இவற்றினது சேதம் மேற் குறிப்பிட்ட பச்சையிலைத் தத்திகளினள விற்கு இருப்பதில்லை.

10-XI

இலைத்தத்திகளை பொதுவாகவே முகாமைத்துவப்படுத்துவதில் அதிகளவு கவனம் எடுத்துக் கொள்ளல் அவசியம். கபிலத் தத்திகள் போலல்லாது இவை மேலே இலைப் பரப்பிலேயே செறி வர்கக் காணப்படும்.

இதனால் இவற்றைக் கண்காணிப்பதும் கட்டுப் படுத்தவும் பின்வருவனவற்றை தெரிந்திருத்தல் அவசியம்.

1.நெருக்கமாக நெற்பயிர் வளர்வதை தவிர்க்க வேண்டும். இதற்கு பரிந்துரைத்த அளவு விதை நெல்லை நேரடி விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும்.

2. பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக தழைச்சத்தை அசேதன இரசாயன வடிவில் இடக்கூடியது. தழைச்சத்து அதிகம் பயன்படுத்தினால் நெல்லின் இலைப்பகுதி செழித்து வளரும். இதன்போது கலங்கள் நலிவுறுவது தத்திகள்பெருகவும் வாய்ப்பாகி விடும்.

3. நாற்று மூலம் நடுகைசெய்யும் நெற்பயிரில் பயிர் இடைவெளியை கூட்டிக் கொள்ளவும், நிரையாக நடுவதால் உள்ளே கண்காணிப்பதும் இலகுவாகிவிடும்.

4. தேவையற்ற பீடைநாசினிப் பிரயோகம் அறவே தவிர்க்கப்படல் வேண்டும்.

5. மஞ்சள் ஒட்டும்பொறிகளை நெல்வயலில் வைத்து இலைத் தத்திகளின் வரு கையை மற்றும் பெருக்கத்தை அவதானிக் கலாம்.


6. வைரசு நோய்கள் நெல்லில் ஏற்பட்டால் கட்டுப்படுத்துவது கடினம். அதனால் வருமுன் காத்தலே சிறந்தது.

7. இலைத்தத்திகள் பெருக்கமடையாது கவனித்தலும் தொடர்ச்சியான கண்காணிப்பும் மிகமிக அவசியம்.

8. விரைந்து கட்டுப்படுத்த தத்திகளுக்கான பூச்சிநாசினியான பீ.பி.எம்.சி இனை தேவை கருதி விசிறலாம். (தொடரும்)

## கிராமப்புற மாணவர்களும் 'அருணலு' கணக்கை ஆரம்பித்தல் வேண்டும்

### கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' சேமிப்புத்திட்டம் பற்றி தெரிந்துகொள்வதற்கு அதிபர், ஆசிரியர்கள் முன்னின்று செயற்படுவார்களாக இருந்தால் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு எமது வங்கி உறுதுணையாக விளங்கும். இவ்வாறு கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர் ஏ.எம்.ஏ. குபேர குலேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள கொமர்ஷல் வங்கியின் கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற தரம் 05 மாணவர்களுக்கான *அருணலு* புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வி லேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது *அருணலு* சேமிப்புத் திட்டத்தில் கணக்கு வைத்திருக்கவுள்ள மாணவர்கள் தமது புலமைப்பரிசிலுக்கு தோற்றுவதற்கு முன் வங்கியில் ஆகக்குறைந்தது ரூபா 5000 வைப்பிலிட வேண்டும். இவ்வாறு கட்ட வசதியில்லாதவர்கள் பரீட்சைக்கு முன்னரான 6 மாதத்திற்கு முன் பகுதிகளாக பிரித்து கட்டலாம். இதன் மூலம் பரீட்சையின் பாடசாலை மட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்ற 1,2 ,3 ஆம் இடங்களைப் பெற்றோருக்கு முறையே ரூபா 10000, 7500 ,5000 என பணப்பரிசில்கள் வழங்கி வருகின்றோம்.

இதேபோல் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்ற ஒருவருக்கு மட்டும் தாம் வைப்புச் செய்த தொகையில் இரு மடங்கை பணமாக வழங்குகிறோம்.

12 வயதிற்குட்பட்டவர்களுக்கென ஆரம்பித்துள்ள 'சூரிய உதய' என்னும் இத்திட்டம் 17 வருடங்களாக கொமர்ஷல் வங்கியினால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் கிராமப்புற பாடசாலைகளை சேர்ந்த உயர்புள்ளிபெற்ற பல மாணவர்கள் இக்கணக்கினை ஆரம்பிக்காமையினால் பணப்பரிசுகளைப் பெறும் வாய்ப்பை இழந்துள்ளன என்றார். (2-6-30)

## துருக்கியிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோத சிகரெட் கடத்தல்

(கொழும்பு)

துருக்கி நாட்டிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு சிகரெட்டுக்களைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் கும்பலொன்று தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் குருணாகல் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கலால் அத்தியட்சகர் பிரபாத் ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரிடமிருந்து 35 இலட்சம் ரூபா பெறுமதியான சுமார் 2இலட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வான் ஒன்றில் சிகரெட்டுக்களைக் கொண்டு சென்றபோது கைதுசெய்யப்பட்ட இவர்கள் நீண்ட காலமாக இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக கலால் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (2-6)

## சிறுவர்களை பாதுகாப்பதற்கான இடைத்தங்கல் கிராமம்

(கொழும்பு)

குடும்பப் பிரச்சினைகள் மற்றும் கணவன் மனைவி பிரச்சினை ஆகியவற்றால் சிறுவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கச் செய்யவும் அவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பானதாக அமையச் செய்வதற்குமான புதிய திட்டம் ஒன்றை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தை அமைப்பது உட்பட அது தொடர்பான ஆலோசனைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் ஜகத் வெல்லவத்த தெரிவித் தார். (2-6)

# அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் என்பது தமது திட்டம்-என்கிறார் ரணில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் துறைமுக மொன்றை நிர்மாணம் செய்ய வேண்டும் என்பது தமது திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



தமது ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டையில் துறைமுகம் ஒன்றை அமைப்பது குறித்த யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரிபத்கொட பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் எவ்வித தூரநோக்குமின்றி செயற்பட்டு வருவதாகவும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு நலத்திட்டங்களை அரசாங்கம் வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# கோதுமை மா பாவனை இலங்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதை யடுத்து கோதுமை மாவின் பாவனை 4 இலட்சம் மெற்றிக் தொன்களினால் குறைந் துள்ளது. அரிசி பாவனை அதிகரித்துள்ளதால் மறைமுகமாக உள்நாட்டு விவசாயிகள் நன்மை அடைந்து வருகின்றனரென விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் 9 இலட்சம் மெற்றிக்தொன் கோதுமை மா பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பெருமளவு பணம் வெளிநாட்டுக்குச் செல்கிறது.

ஆனால் பயிரிடுவோம் நாட்டைக் காப்போம் திட்டத்தின் மூலம் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக அரிசிப்பாவனை பெரிதும் அதிகரித்தது.

தற் பொழுது அரிசி மாவின் பாவனை 5 இலட்சம் மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளது. அரிசிப் பாவனை அதிகரித்துள்ளதால் வெளிநாட்டுக்குச் செல்லும் பணம் தற்பொழுது விவசாயி களின் கைகளுக்குச் செல்கிறது என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## வாக்குப் பெட்டியின் உட்புறத்தில் ஸ்ரிக்கர்

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போது வாக்குப் பெட்டிகளின் உட்புறத்திலும் ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டுவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

அதன்படி தேர்தல் தினம் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் வாக்குப் பெட்டியை சீல் வைப்பதற்கு முன்னர் பெட்டியை பரிசோதித்து கட்சிப் பிரதிநிதிகள் பெட்டியின் உட்பகுதியில் கட்சி ஸ்டிக்கரை ஒட்ட வேண்டும்.

அதேபோன்று வாக்கெடுப்பு முடிந்த பின்னரும் வாக்குகள் எண்ணும் நிலையத்துக்கு கொண்டு செல்வதற்கு முன்னரும் ஸ்டிக்கர் ஒன்றை ஒட்ட வகை செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலக்கத் தகடற்ற வாகனங்களில் பிரசாரம் செய்யும் சில வேட்பாளர்கள்

## தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இலக்கத் தகடுகள் பொருத்தப்படாத வாகனங்களைப் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாகத் தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தவென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லையெனத் தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பதிகாரி, சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

அத்துடன் சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லையெனவும் இவை தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் அவர் கூறுகிறார்.

இது தொடர்பில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பதிகாரி டி.எம். திஸாநாயக்க தெரிவிக்கும்போது, பிரசாரங்களில் ஈடுபடும் சில வாகனங்களின் இலக்கத்தகடுகள் மறைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டங்களையும் போக்குவரத்துச் சட்டங்களையும் மீறும் இத்தகைய நடவடிக்கைகளால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இத்தகைய வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் இதனைத் தவிர்த்துக் கொள்ளவேண்டியது அரசியல் கட்சிகளினதும் பொலிஸாரினதும் கடமையெனவும் குறிப்பிட்டார். (6)




7



கிருஷ்ணபிள்ளை
ஸ்ரீ சரவணபவான்
சட்டத்தரணி

இலங்கையை ஆசியாவின் அதிசயம் ஆக்குவோம்

வளமான வாழ்வுக்கு சமாதான சக வாழ்வு

பொதுத் தேர்தல்-2010
தேர்தல் மாவட்டம்-யாழ்ப்பாணம்


# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விவசாயிகளினாலும் இளைஞர்களினாலும் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வட்டுக்கோட்டை கொத்துறை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

இம்முறை நடத்தப்படவுள்ள போட்டிகளில் குடாநாட்டில் உள்ள அனைத்து மாட்டு வண்டில்களும் கலந்து கொள்ளலாம் எனவும் போட்டிகள் A,B,C பிரிவுகளாக நடத்தப்படவுள்ளதாகவும், வெற்றிபெறும் வண்டில் உரிமையாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

எனவே மேற்படி போட்டியில் அனைத்து யாழ்.மாவட்ட மாட்டு வண்டில் உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொண்டு போட்டிகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

நீண்டகாலத்திற்கு பின்னர் மேற்படி திடலில் சவாரிப் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4-27)


மாபெரும் மலிவு விற்பனை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...
01.04.2010--10.04.2010 வரை

உயர்தரமான இறக்குமதி செய்யப்பட்ட தரை ஓடுகள் (Tiles), சுவர் ஓடுகள் மற்றும் அனைத்து விதமான குளியலறை சாதனங்கள் அனைத்தையும் **40% விலைக் கழிவுடன்** பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்,

TPS சர்வதேச தனியார் நிறுவனம்,
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0775702253, 0777578277
(991)

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் *சச்சியா ஹாட்வெயர்ஸ் அன் எலக்ரிக்கல்ஸ்* ஆதரவில் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு –2539

2 ஆம் பரிசு –0352

3 ஆம் பரிசு – 1997

*ஏழு ஆறுதல் பரிசில்கள்:–* 0031, 1051, 0911, 2487, 4238, 4192, 2353

மேற்படி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் சங்க காரியாலயத்தோடு தொடர்புகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

(சி/1105)

மண்டைதீவு, வேப்பந்திடல் அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை
விசேட பொதுக் கூட்டம்

இடம்:– ஆலய முன்றல்
காலம்:– 04.04.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
தலைவர்:– திரு.ச.வசந்தரூபன் அவர்கள்

*நிகழ்ச்சி நிரல்*

1. இறைவணக்கம்
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. மண்டைதீவு 4 ஆம் ,5ஆம், 6ஆம் ,7ஆம்,8 ஆம் வட்டாரங்களுக்குரிய நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.
5. ஆலய புனருத்தாரணம் ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்தல்.
6. வேறு விடயங்கள்.

மண்டைதீவு வாழ் சைவப் பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
செ.அ.ஸ்ரீபத்மராசா
செயலாளர்.

(சி/4964)

# இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் இலகுவில் வெற்றியீட்டலாம்–ரணில்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இலகுவில் வெற்றியீட்ட முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி பலவீனமடைந்திருந்த காலத்தில் 80 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதாகவும் தற்போது கட்சி வலுவான நிலையில் காணப்படுவதாகவும் இதனால் இலகுவில் வெற்றியீட்டக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது, வாக்களிப்பு முதல் இறுதி முடிபுகள் வரையிலும் கண்காணிக்கப்படும் என்றும் மோசடிகள் எதுவுமின்றி மக்களின் வெற்றியை உறுதிப்படுத்த தமது கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ராஜகிரியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (2-6)

# போர் காரணமாக யாழ். குடாநாட்டில் 73 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

## இராணுவத்தரப்பு தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போர் காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டில் 73 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு மூடப்பட்ட அநேகமான பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படவில்லை எனவும் இராணுவ சிவில் இணைப்புக்காரியாலயம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண நகரத்தை அண்டிய 14 பாடசாலைகளும் தீவுப் பகுதிகளைச் சேர்ந்த 26 பாடசாலைகளும் சாவகச்சேரியில் 11 பாடசாலைகளும் வலிகாமம் பிரதேசத்தில் 19 பாடசாலைகளும் வடமராட்சி பகுதியில் 3 பாடசாலைகளும் இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

இவ்வாறான பாடசாலைகள் 13 அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் அமையப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (2-6)

# இந்தோ.துறைமுகத்தில் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## டாக்டர் கிருஸ்ணசாமி பேட்டி

(சென்னை)

இந்தோனேசிய துறைமுகத்தில் 6 மாதமாக கப்பலில் தவிக்கும் 254 இலங்கை தமிழர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டாக்டர் கிருஸ்ணசாமி கூறினார். நேற்று முன்தினம் ஊடக வியலாளர்களுக்கு பேட்டி அளிக்கும் போது அவர் மேலும் கூறியதாவது.

இலங்கையில் சொந்த மண்ணில் அடிமைகளாக வாழ விருப்பமில்லாத தமிழர்கள் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாக சென்றார்கள். கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆந்திகதி பெண்கள் மற்றும் குழந்தைகளோடு தமிழர்கள் இலங்கையில் இருந்து சிறிய கப்பலில் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற போது இந்தோனேசிய கடற்படையால் வழிமறிக்கப்பட்டனர்.

இவர்கள் கடந்த 6 மாதகாலமாக உணவு மற்றும் மருத்துவ வசதியின்றி இந்தோனேசியா துறைமுகத்தில் கப்பலிலேயே சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கப்பலில் இருந்த கிறிஸ்டின் ஜேக்கப் என்ற 29 வயது இளைஞர் சரியான மருத்துவ சிகிச்சை இல்லாமல் கடந்த 2 வாரங்களுக்கு முன்னால் இறந்துபோனார். இதே நிலை நீடித்தால் கப்பலில் இருக்கும் மற்ற இலங்கை தமிழர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே இந்திய அரசு காலம் கடத்தாமல் இந்தோனேசியாவில் கப்பலில் தவிக்கும் இலங்கை தமி ழர்களை இந்தியா வுக்கு மீட்டு வரு வதற் காக நட வடிக்கை எடுக்க வேண்டும் இதற்கான முயற்சியை தமிழகஅர சும் மேற் கொள்ள வேண்டும் என்றார்.


தமிழரசுக் கட்சி

தமிழரிடையே
நல்ல அரசியல்
கலாசாரத்தை
வளர்த்தெடுப்போம்.



பேராசிரியர்
இரா.சிவசந்திரன்

5


# மனிதாபிமான பணிகளுக்காக

# மேலும் ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதியுதவி வழங்க பிரித்தானியா தீர்மானம்

மனிதாபிமான பணிகளுக்காக மேலும் ஒரு மில்லியன் ஸ்றொலிங் பவுண் நிதி உதவிகளை வழங்க பிரித்தானிய தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்திக்கொள்ள இந்த நிதி உதவி அளிக்கப்படவுள்ளது.

கடந்த பதினெட்டு மாதங்களில் பிரித்தானியா 12.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அதற்கு மேலதிகமாக ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை வழங்க பிரித்தானியா தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலக்கண்ணிவெடி அகற்றுதல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், உணவு, குடிநீர் போன்ற பல்வேறு வழிகளில் பிரித்தானியா மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# எதிர்காலத்தில் குறைந்த விலையில் எரிபொருளை விநியோகிக்க முடியும்

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை நம்பிக்கை

(கொழும்பு)

பிளாஸ்டிக் மற்றும்பொலித்தீன் என்பவற்றைப் பயன்படுத்திப் பெற்றோல் உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகள் வெற்றியளித்துள்ளதை அடுத்து எதிர்காலத்தில் குறைந்த விலையில் எரிபொருளை விநியோகிக்க முடியுமென மத்திய சுற்றாடல் அதிகாரசபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தற்போது இந்தமுறையில் தயாரிக்கப்படும் பெற்றோலை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்குப் பயன்படுத்துவதாகவும் எதிர்காலத்தில் மோட்டார் வண்டிகளுக்கும் பயன்படுத்தமுடியுமெனவும் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் டாக்டர் விமலதர்ம அபேவிக்கிரம குறிப்பிட்டார்.

கழிவு பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனைக் கொண்டு பெற்றோலை உற்பத்தி செய்யும் இம்முறை புத்தாக்குநர் ஒருவரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வகை எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனம் வெளியேற்றும் புகையை எட்டியாந்தோட்டை புகை ஆய்வு நிறுவனம் பரிசோதனைக்கு உட்படுத்திய பின் அது தரமுள்ளதெனச் சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும் இதன் இரசாயனத் தன்மை குறித்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இரசாயனப் பிரிவு ஆய்வை மேற்கொண்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தத்திட்டத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நிதியுதவி வழங்குகின்றது. (2-6)


நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்–2010

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



1991 செப்ரெம்பரில்
ஜனாதிபதி
பிரேமதாசவுக்கு கூறியது:
"We are two Nations in one Country"
"நாங்கள் இரு தேசியம் ஒரு நாடு" என்பதாகும்.
இந்தக் கருத்தை
அன்றும், இன்றும்,
என்றும் கடைப்பிடிப்பவர்

எப்பொழுதும் மக்களுடன்
இந்த மண்ணில்

சீ.வீ.கே.சிவஞானம்
(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர், பட்டயச் செயலாளர்)

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தமிழ்த் தேசிய தாயக தன்னாட்சி நோக்கிய பயணிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தேர்தல்–2010

எந்த இக்கட்டிலும் எட்டப்பர் வாழ்வு தந்ததாக வரலாறு இல்லை. தமிழ் ஈழத்தில் தமிழர் தலைநிமிர்ந்து வாழ வாக்களியுங்கள்



இலங்கை தமிழரசுக் கட்சி



சீ.வீ.கே.சிவஞானம்
11

மக்களோடு மக்களாக
இறுதிவரை மண்ணில்
நிற்கும் மைந்தர்களை
ஆதரிப்போம்.

மு.றெமிடியஸ்
9

யாழ்.மாநகர மக்கள்



இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ். காரியாலயத் திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் தேசியக் கொடியேற்றிவைப்பதையும் அமைச்சர்,இலங்கை முதலீட்டுச்சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா ஆகியோர் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும் மங்கல விளக்கேற்றுவதையும் அமைச்சர்,முதலீட்டுச்சபை தலைவர்,யாழ். காரியாலய சிரேஸ்ட பிரதிப்பணிப்பாளர் ஏ.ஜெயமனோன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்-டுசாந்தன்)

# இங்கிலாந்தில் மாணவர்களுக்கான விசாக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது

(லண்டன்)

இங்கிலாந்து நாடு, மாணவர்களுக்கான விசா கட்டணத்தை 199 ஸ்ரேலிங் பவுண்காக உயர்த்தியுள்ளது. இதுவரை இந்தக் கட்டணம் 145 ஸ்ரேலிங் பவுணாக இருந்தது. 54 ஸ்ரேலிங் பவுணாக உயர்த்தப்பட்டு உள்ளது.இந்த உயர்வு வருகிற 6 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

அதோடு டிப்பெண்டன்ட் விசாவும் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இந்த விசாக் கட்டணம் ஆயிரத்து 680 ஸ்ரேலிங் பவுணாகும். இந்த விசாவின் கீழ் இங்கிலாந்து நாட்டில் குடியேறி உள்ளவரின் தாத்தா , பாட்டி , தாய்,தந்தை,சித்தப்பா,பெரியப்பா,அத்தை,மாமா ஆகியோர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட உறவினர் இங்கிலாந்துக்கு செல்லலாம்.

குறுகிய கால பயணத்துக்கான விசா கட்டணம் 67 ஸ்ரேலிங்பவுணில் இருந்து 68 ஸ்ரேலிங் பவுணாக உயர்த்தப்படுகிறது. மற்ற விசா கட்டணங்களும் உயர்த்தப்பட்டு உள்ளன. (2-6)

## க.பொ.த(சா/த)பெறுபேறுகள் இம்மாதம் 9ஆம் திகதி வெளிவரும்

க. பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வெளிவரவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற இந்த பரீட்சையில் வடக்கு- கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் 4 இலட்சத்து 10ஆயிரத்து 274 பேர் தோற்றியிருந்தனர்.இந்த பரீட்சைகள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 22ஆம் திகதி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# ஆண்டு விழாவும் நினைவுப் பேருரையும்

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன் றத்தின் பராமரிப்பில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி யில் இயங்கிவரும் மாணவர் விடுதியின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வைத்திய கலா நிதி க.வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்துமான்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் முன்னைநாள் கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி . இராசமனோ கரி புலேந்திரன் ,கொழும்பு இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபர் த. சங்கரலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள். இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரி வுரையாளர் சிவஸ்ரீ ம. பாலகை லாசநாத சர்மா **சைவ மக்களின் பண்பாட்டு மரபில் கோயில் கிரியை களும் அவற்றின் உள்ளார்த் தங்களும்** எனும் பொருளில் நினை வுப் பேருரையாற்றுவார்.

12 ஆண்டுகளாக போரினாலும் வறுமையாலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அகில இலங்கை இந்து மாமன்றம் பராமரித்து வருகிறது.

மேலும் புனருத்தாரண முகாம் களில் அடைக்கப்பட்ட 273 மாணவ மாணவி களையும் இந்த விடுதியில் இணைத்து கல்வி கற்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஓ-2)


வடமராட்சி மண்ணின் மைந்தன்
எஸ்.எக்ஸ். குலநாயகம்



நாலு தசாப்தங்கள் ( 40 ஆண்டுகள்)
அரசியல் வாழ்வில்
தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர்.

"குலம் - இனத்தின் சிறுமையைக் களைய உழைத்தவன்
தன் இல்லத்தின் வறுமையைப் போக்க நினைத்திலன்."

குலநாயகம் எனும் குணநாயகம்
கனடாவில் இருந்து கனகமனோகரன் - பக்கம் 03

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
எஸ். எக்ஸ். குலநாயகம்



X
12

# பனை சார் பொருள் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்

## வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனம்பொருட்களை இயந்திரமயப்படுத்தலுக்கான நிபுணர் குழுவை இந்தியாவிலிருந்து வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளிற்கு வர வழைத்து இதன்மூலம் பனையை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் தன்னாலான முயற்சியை மேற்கொள்வதாக யாழ். வந்த வடக்கு,கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

வடக்கு,கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள வளங்கள் சார்ந்த அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதன்கிழமை பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இங்கு பனை வளம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், வடக்கு, கிழக்குப் பகுதிகள் ஏராளமான பனைவளம் நிறைந்த இடமாகக் காணப்படுவதால் பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் களி, பதனீர் என்பனவற்றை பொதி செய்யவும், உற்பத்திப் பொருட்களை பவுடராக்கவும் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

இதற்காக தான் தற்போது பனம்பொருட்களை இயந்திர மயப்படுத்துவதற்கான ஆய்வுகள் நடைபெறுகின்றது.இதற்குரிய நிபுணர் குழுவை இந்தியாவிலிருந்து வரவழைப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் வடக்கு, கிழக்கு ஆகிய பிரதேசத்தில் பனையை நம்பி வாழும் மக்கள் பெரிதும் நன்மையடைவர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தன்னாலான முழு உதவிகளையும் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வளங்களுக்கு பொறுப்பாகவுள்ள பிரமுகர்களுடனான சந்திப்பின் போது பனை அபிவிருத்தி சபை சார்பாக சபையின் விரி வாக்கல் உத்தியோத்தர் கா.கோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(2-30)

# ஜே.வி.பி.ஒரு ஆசனத்தையேனும் இம்முறை பெற்றுக் கொள்ளாது

## நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக்கொள்ளாதென சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சி 2.1 வீத வாக்குகளையே பெற்றுக் கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை ஆட்சி செய்வது தொடர்பில் ஜே.வி.பி.எவ்வித கொள்கைகளையும் கொண்டிருக்கவில்லை என்றும் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டிருக்காவிட்டால் அதிகளவு ஆசனங்களை கைப்பற்றியிருக்காதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொத்த வாக்குகளில் ஐந்து வீதமேனும் இல்லாத கட்சிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

தீவகக் கல்வி வலயத்தில் தமிழ்பாட உதவிக் கல்விப்பணிப்பாளருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இப்பதவிக்கு தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் I இனைச் சேர்ந்த தமிழ்ப் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தரம் 2-I ஐச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர்களும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்தினை தீவக வலயத்தில் பெற்று இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

# ஐ.தே.மு. மாத்தறை வேட்பாளர் ஆளும் கட்சியில் இணைந்தார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் மாத்தறை மாவட்ட வேட்பாளரான சட்டத்தரணி இந்திக்க ஜாதுங்க கடந்த புதன்கிழமையன்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டார்.

வேட்பாளர் இந்திக்க ஜாதுங்க மாத்தறை ஹக்மீமன தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராகவும் செயற்பட்டு வந்தவராவார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் மாத்தறை சனத் ஜெயசூரிய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற மேற்படி பிரசாரக் கூட்டத்தின்போது திடீரென பிரதான மேடையில் தோன்றிய ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் இந்திக்க தான், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆதரிக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-3)




**தமிழ் மக்களின் இன்றைய கடமை**

*காலம் காலமாக தொடரும் பேரினவாத அச்சுறுத்தலுக்கு முடிவுகட்ட

*இரண்டாம் தர பிரஜைகள் என்ற அவப்பெயரில் இருந்து விடுபட

*எமது வாழ்வுரிமை,அரசியலுரிமையை வென்றெடுக்க, சிந்தியுங்கள்

சொந்த மண்ணில் எந்தவித அடக்கு முறைகளையும் இல்லாது துடைத்தெறிய

*எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உரிமையுடன் பாதுகாக்க

*புலம் பெயர்ந்தும் இடம்பெயர்ந்தும் வாழும் எம்மக்களின் தேசிய அபிலாசைகளை உறுதி செய்ய

*தலைநிமிர்ந்து எல்லோர்க்கும் சரிநிகர் சமானமாக வாழும் எதிர்காலத்தை நோக்கி முன்னேற

**சிந்தியுங்கள் ஒன்றுபடுங்கள் வாக்களியுங்கள்**

**சலுகைகளுக்காக உரிமைகளை தாரைவார்க்கும் சுயநல கைக்கூலி அரசியல் வாதிகளை புறந்தள்ளி மானுட உரிமைகளுக்காக ஓங்கிகுரல் கொடுத்த மகேஸ்வரன் வழியில் எதற்கும் அஞ்சாத இலட்சிய உறுதியுடன் மக்கள் பணிக்கு தன்னை அர்ப்பணிக்க முன்வந்துள்ள**

**தியாகராஜா துவாரகேஸ்வரன் அவர்கள் கரத்தைப் பலப்படுத்துங்கள்**

X

1

மக்கள் துயர் துடைக்க மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

(C/5029)

சண்டை செய்ய விரும்புகிறவனுக்கு ஒவ்வொரு வேலியிலும் கம்பு தென்படும்.
*- இங்கிலாந்து*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சர்வதேசத்தைப் பகைப்பது ஆரோக்கியமானதல்ல

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் உச்சமடைந்து காலம் தந்த சோகமாக அது தோற்றுப்போக, இப்போது தமிழ் அரசியல் தலைமைகள் தங்களுக்குள் குழம்பி–பிரிந்து–தத்தம் பக்கமே நியாயம் இருப்பதாக பேசுமளவிற்கு நிலைமை உள்ளது.

போராட்டம் நடந்து கொண்டிருந்த போது இனப்பிரச்சினைக்கான தீர்வை 'தாக்குதல்கள்' வலியுறுத்தும் என்பதே பொதுவான கருத்தாக அமைந்தது.

இதன் காரணமாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேசத்தின் வகிபங்கு முதன்மையானதன்றி துணையானதாக கருதப்பட்டது.

சிலவேளைகளில் தாக்குதலுக்கு தேவையான ஆயுத வழங்கலில் சர்வதேசத்தின் உதவி அவசியப்பட்டதாக இருந்திருக்கலாமேயன்றி இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேசத்தின் வகிபங்கு முதன்மைப் படுத்தப்படவில்லை என்ற கருத்தை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அதேசமயம் வன்னிப்போர் மூண்டு முள்ளிவாய்க்கால் சமர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சர்வதேச நாடுகளின் உதவி முழுமையாகத் தேவைப்பட்டது.

சர்வதேசம் உதவமறுத்தால் போரில் தோல்வியே மிஞ்சும் என்ற நிலை தமிழ்த் தலைமைகளின் முடிபாயிற்று.

துரதிர்ஷ்டவசமாக சர்வதேசம் தமிழ் மக்களை கைவிட்டது அல்லது உதவுவது போல நடித்து காலை வாரிவிட்டது எனலாம்.

இவற்றின் ஒட்டுமொத்த விளைவு தமிழ் மக்களின் உயிர் இழப்பாகவும் சொத்தழிவாகவும் முடிந்து போக,

இன்று இலங்கைத் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து இருண்ட யுகத்தில் வாழும் மனநிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இங்குதான் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கேள்வி எழுகின்றது.

அதாவது போராட்டமும் அதன் வழித்தாக்குதல்களும் இலங்கை அரசை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தும் என நம்பிய மக்கள், இப்போது யாரை நம்புவது?

இங்குதான் சிக்கல் எழுகின்றது. இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி அதன்வழி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பது கற்பனைக்கும் உதவாத காரியம்.

அது சாத்தியமாகுமாக இருந்திருந்தால், ஆயுதப் போராட்டமும் இத்தனை அழிவும் இந்த மண்ணில் நடக்கவாய்ப்பில்லை.

எனவே அரசுடன் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல் என்பதை ஓரங்கட்ட முடியும்.

அப்படியானால் தமிழ் மக்களுக்கு யார் துணை? இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எப்படி?

இங்குதான் சர்வதேச சமூகத்தின் உதவியும் ஆதரவும் தேவைப்படுகின்றது.

வன்னிப் போரில் தாம் உதவி செய்யாமையினால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்து விட்டனர்.

அதில் தங்களுக்கும் பங்குண்டு என்ற கழிவிரக்கம் உலக நாடுகளுக்கும் ஐ.நா. சபைக்கும் இல்லாமல் இல்லை.

எனவே உலகம் எங்களை பரிதாபமாக பார்க்கும் இவ்வேளையில் காலம் தாழ்த்தாது சர்வதேசத்தின் உதவியைப் பெற்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தமிழ்த் தலைமைகளின் சமயோசித புத்திசாலித்தனமாகும்.

எல்லா இடத்திலும் நாம் விட்ட சமயோசிதத் தவறை இவ்விடத்திலும் விட்டால்,

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் சில்வாவும் பண்டாவுமே தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடுவர். இது உறுதி.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கக்கூடாது -ஹெல உறுமய

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் கட்டுப்படும் விதத்திலான திருத்தங்களை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் மேற்கொள்ள வேண்டுமென்றும் இதற்கு எதிர்க் கட்சிகள் பூரண ஆதரவை வழங்க வேண்மென்றும் ஜாதிக ஹெல உறுமய பகிரங்க வேண்டுகோளை விடுத்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பதை எதிர்ப்பதாகவும் அறிவித்துள்ளது.

கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கேட் போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையில்,

அதன் தேசிய அமைப்பாளரும் சுற்றுச் சூழல் வனவளப் பாதுகாப்பு அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு பின்னர் அரசியலமைப்பில் பாரியளவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். இதனைக் காலந்தாழ்த்தாது இவ்வருட இறுதிக்குள் செய்து முடிக்கவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக ஒழிப்பதை நாம் எதிர்க்கின்றோம்.

ஏனென்றால் மாகாண சபை முறைமைக்குள் நாட்டை ஒன்றுபடுத்தி ஒற்றையாட்சியை முன்னெடுப்பதற்கு இந்த அதிகாரம் கட்டாயம் அமுலில் இருக்க வேண்டும். இதன் காரணமாகவே எவருக்கும் அடிபணியாத எம்மால் பயங்கரவாத யுத்தத்தை வெல்ல முடிந்தது.

இந்த முறைமை மட்டும் இல்லாதிருக்குமானால் வெளிநாட்டு தூதுவர்களே எமது நாட்டை ஆளும் நிலை உருவாகியிருக்கும்.

அதே வேளை நிறைவேற்று அதிகாரத்தில் திருத்தங்களை கொண்டு வர வேண்டியது அவசியமாகும்.

பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கலாகாது.

ஏனெனில் மக்களின் வாக்குரிமையினாலேயே பாராளுமன்றம் தெரிவு செய்யப்படுகிறது. இதனை நிறைவேற்று அதிகாரம் கலைப்பதென்பது தார்மீக நெறிமுறையாகாது.

எமது நாட்டு சட்டத்தின் முன்பாக அனைவரும் சமமானவர்கள் எனவே உயர் நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டதாக ஜனாதிபதியை நீதிமன்றம் விசாரிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

நாட்டின் நிதி நிர்வாகத்தை பாராளுமன்றமே கையாள்கிறது. இதனால் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். எனவே காலத்தை கடத்தாது உடனடியாக இத்திருத்தங்களை இவ் ஆண்டிற்குள் மேற்கொள்ள வேண்டும் அதற்காக எதிர்க் கட்சிகள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். (2-6)

# ஆளும் கட்சியினருடன் மனோகணேசன் கிரியெல்லாவின் ஆதரவாளர்கள் மோதல்

## நாவலப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்டக் குழுத் தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் தமது ஆதரவாளர்களுடன் நாவலப்பிட்டி நகரில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் அமைச்சர் மந்தானந்த அளுத்கமகேயின் ஆதரவாளர்களுடன் மோதல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் பகல் ஏற்பட்ட இந்த மோதலில் மனோ கணேசனின் பிரசார பஸ்வண்டியின் பதாகைகள் கிழிக்கப்பட்டன. லக்ஷ்மன் கிரியெல்லவின் வாகனமும் ஆளுங்கட்சி ஆத ரவாளர்களின் வாகனம் ஒன்றும் பரஸ்பர தாக்குதலுக்கு உள்ளானது.

மனோ கணேசனின் பஸ் வண்டியின் சாரதி உட்பட இரண்டு எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் இரண்டு ஆளும் கட்சி ஆதரவாளர்களும் பரஸ்பர தாக்குதலுக்கு உள்ளானார்கள். இந்நிலையில் தமது பிரசாரத்தை தொடர்ந்து மனோ கணேசனும் , லக்ஷ்மன் கிரியெல்லாவும் தமது ஆதரவாளர்கள் சகிதம் நாவலப்பிட்டி நகரில் முன்னெடுத்தனர்.

இது தொடர்பிலே கருத்துத்தெரிவித்த மனோ கணேசன் கூறியதாவது ,நான் கோழைத்தனமான ஒரு அரசியல் வாதி அல்ல. எத்தனை வன்முறைகள் நடந்தாலும் எனது அரசியல் பயணத்தை நான் நிறுத்த மாட்டேன்.

இத்தகைய வன்முறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் , சிங்கள -முஸ்லிம் மக்களுடன் இணைந்து அமைதியாக வாக்களிக்க வேண்டும்.

இந்த சம்பவத்தை அடுத்து பெருந்தொகையான சிங்கள , முஸ்லிம் மக்களும் என்னிடம் தொடர்பு கொண்டு தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள். இது எனக்கும் லக்ஷ்மன் கிரியெல்லாவுக்கும் பெரும் உச்சாகமாக அமைந்துள்ளது என்றார். (2-6)

# மனித உரிமை மீறல்கள் காரணமாவே வெளிநாட்டு தலையீடு ஏற்பட்டுள்ளது

## ஜனநாயக தேசிய முன்னணி

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களின் காரணமாகவே வெளிநாட்டு தலையீடுகள் ஏற்பட்டதாக ஜனநாயக தேசிய முன்னணி கட்சி அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் மனித உரிமை மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளினால் வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக ஜனநாயக தேசிய முன்னணியைச் சேர்ந்த புத்தி ஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கம் தொடர்ச்சியாக ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாக சிரேட விரிவுரையாளர் சந்திரகுப்த தெனுவர தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்கு சார்பான செய்திகளை வெளியிடுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் காரியாலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## மதமும் ஒழுக்கமும்

இந்த உண்மையை மனிதகுலத்திற்குப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் பொருத்தமாக உள்ள பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்வான்.

ஒழுக்கம் உள்ளவனாக இரு. வீரியம் உள்ளவனாக இரு. இதயபூர்வமான உறுதி பிறழாத ஒழுக்கத்தில் நிலைபெற்றிரு. மத சம்பந்தமான தத்துவ உண்மைகளைப் போட்டு உனது மூளையைக் குழப்பித்துக்கொள்ள் வேண்டாம். கோழை தான் பாவம் செய்கிறான். தைரியசாலி ஒரு போதும் பாவம் செய்வதில்லை. மனதால் கூட அவன் பாவத்தை நினைப்பதில்லை.

சுயநலமே ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம் ஆகும்.

# ஆண்டவரின் உயிர்ப்புக்காக காத்திருக்கும் 'புனித சனி'

புனித சனி தினமான இன்றைய நாள் பாஸ்கா திருவிழிப்பு என்று அழைக்கப்படுகின்றது. தொன்றுதொட்டே இவ்விரவு ஆண்டவருடைய வருகைக்காக விழித்திருந்து காத்திருக்கும் இரவாக இருந்து வந்துள்ளது. (யாத் 12.42) நற்செய்தியில் காண்பதுபோல், ஆண்டவரின் வருகையை எதிர்கொள்ள எரியும் விளக்குகளுடன் ஆயத்தமாக இருந்தவர்கள் போன்று, இன்றைய இரவில் இறைமக்கள் காத்திருப்பர்.

## இன்று புனித சனி

இங்கு ஒளி இறைவனைக் குறிக்கும் அடையாளக் குறியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனெனில், ஒளியின் வடிவில் தான் இறைவன் முட்புதரில் மேசேக்கு காட்சி தந்தார். ஒளியின் வடிவில்தான் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. இன்று புதுத் தீ புனிதப்படுத்தி பாஸ்காத் திரியில் ஏற்றப்படும். இங்கு ஒளியின் அடையாளம் இயேசுவின் உயிர்ப்பை உறுதிப் படுத்துகிறது.


ஏனெனில், ''உலகின் ஒளி நானே'' என்று இயேசு மொழிந்தார். பாஸ்காத் திரியில் காணப்படும் சிலுவை அடையாளம் மானிடம் முழுவதும் சிலுவையால் மீட்கப் பட்டதையும், அல்பா, ஒமேக்கா என்ற கிரேக்க எழுத்துக்கள் இயேசு என்றென்றும் நிலையானவர் என்பதையும் குறிக்கின்றன. ஐந்து சாம்பிராணி மணிகளும், இயேசுவின் ஐந்து திருக்காயங்களை ஞாபகப்படுத்துகின்றன.

இன்றைய வழிபாடுகள் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளன. அவை திரு ஒளி வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு என்பனவாகும்.

பாஸ்கா இரவு விடுதலையின் இரவு மனிதகுலம் மீட்புப் பெற்ற இரவு. மீட்புப் பெற்ற இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு இறைவன் செய்தவல்ல செயல் களுக்காய் இறை வனுக்கு நன்றிப் பண்இசைந்தனர். அதே விதமாக நன்றியை வெளிப்படுத்தும் முகமாக குருவானவர் பாஸ்காப் புகழுரையைப் பாடுவார்.

இன்றைய இறைவார்த்தை வழி பாடு மீட்பின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழு திருமுகம், நற்செய்திப் பகுதிகளிலிருந்து ஒவ்வொன்றுமாக 9 வாசகங்கள் வாசிக்கப்படும். இவ்வேளையில் கிறிஸ்துவின் உயிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக குருவானவரால் '' உன்னதங்களிலே'' பாடப்படும் ( ஆலய மணிகளும் ஒலிக்கும்)

தொடர்ந்து தண்ணீர் புனிதப்படுத்தப் பட்டு திருமுழுக்கு அளித்தல், திருமுழுக்கு வாக் குறுதிகளை புதுப்பித்தல், இறை மக்களை புனிதநீரால் புனிதப்படுத்தல் போன்ற நிகழ் வுகள் இடம்பெறும்.



மேலும், நற்கருணை வழிபாட்டின் மூலம் அன்னையாம் திருச்சபை கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைமுக பொருளை பக்திச் சிறப்புடன் கொண்டாட அழைத்துநிற்கின்றது. இத்தோடு புனித வியாழனோடு ஆரம்பித்த வழிபாடுகள் நிறைவுபெறுகின்றன. இக்கருத்துக்கள் அனைத்தையும் நன்கு உணர்ந்தவர்களாக புனிதவார வழிபாடுகளில் பக்தியோடு பங்கு பற்றுவோம்.

(நன்றி -பாதுகாவலன்)

## திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 36ஆவது ஆண்டு பொதுக்கூட்டம்

மன்னார் மாதோட்டம் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் திருப்பணிச் சபையின் 36 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு -7, பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந் துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இவ்வாலயத்தின் பக்தர்களும் நலன்விரும்பிகளும் தமது பிரேரணைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என திருப்பணிச் சபையின் இணைப் பொதுச் செயலாளர்களான அ. திருநாவுக்கரசு மற்றும் செ.இராகவன் ஆகியோர் அறிவித்துள்ளனர். (ஓ-4-22)

## சேலை விற்பனையும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வைபவங்களுக்கான சேலை விற்பனையும் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 5 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் வே. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகலரும் கலந்து பார்வையிடவும் கொள்வனவுகளை மேற்கொள்ளவும் வசதி செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

## மின்சாரத் தடையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கோப்பாய்)

கடந்த சில நாட்களாகக் கோப்பாய் மத்திய பகுதியில் இரவுவேளைகளில் தினசரி அடிக்கடி மின்சாரத்தடையேற்பட்டு வருகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துத்தரப்பினரும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் பலத்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-79)

## 95 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது – அஞ்சல் திணைக்களம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான 95 சதவீதமான வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்னும் 5 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் பிரதேச அஞ்சல் நிலையங்களில் நிலுவையில் உள்ளதாகவும் இதுவரையில் தமக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள அஞ்சல் நிலையத்துக்குச் சென்று அவற்றை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்த முறை அரசியற் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் தமது கொள்கைப் பிரகடனங்களை வாக்காளர்களுக்கு இலவசமாக அஞ்சல் நிலையத்தினூடாக விநியோகிக்க தேர்தல்கள் ஆணையாளர் வாய்ப்பளித்தார் எனவும் அஞ்சல்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (4-6)

## வாக்குச் சாவடிகளை பாதுகாக்க கிராமிய மட்டத்தில் குழுக்கள்

### அநுரகுமார திஸாநாயக்க அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர் தலின் போது வாக் குச் சாவடிகளைப் பாதுகாப்பதற்காக கிராமிய மட்டத்தில் குழுக்களை அமைக்கவுள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு றோயல் மாவத்தையில் அமைந்துள்ள ஜனநாயக தேசியக் கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். இதற்கமைய வாக்குச் சாவடி களைப் பாதுகாப்பதற்காக கிராமிய மட்டத்தில் வாக்குச்சாவடிகள் மட்டத்தில் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.



வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல் லுதல், வாக்கு எண்ணும் பணிகளைக் கண்காணித்தல் போன்றவற்றுக்காகவும் வேலைத் திட்டங்கள் உருவாக்கப் பட்டு வருகின்றது என் றார். (2-6)






சங்கானை யூத் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெற் மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சங்கானை உதயதாரகை YMHA அணியினை எதிர்த்து விளையாடி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றிபெற்ற அணிவீரர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# 13-வது திருத்தச்சட்ட மூலத்தை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்

## ஊடகவியலாளர் மாநாட்டில் வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தச்சட்டத்தை ஓர் ஆரம்பமாக வைத்து அதிகார பரவலாக்கல் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ஆட்சியாளர்கள் வழங்கவேண்டும் என வடக்குக் கிழக்கு மாகாணமுன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் நேற்று ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் யாழ். அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்வியாளர்கள், வர்த்தகர்கள், பத்திரிகையாளர்கள், அரச ஊழியர்கள், இளைஞர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து எதிர்காலத்தை நோக்கி முன்னேறவேண்டும்.

யாரும் எதையும் சும்மா தரமாட்டார்கள். இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தங்களுடைய நலன்களுக்கூடாகவே எமக்கு உதவுவார்கள்.

எமக்கு நன்மை செய்ய முன்வருபவர்களுடன் இணைந்து எமது சமுதாயத்தை முன்நோக்கி நகர்த்த வேண்டும். வன்முறைகளால் பலன் இல்லையென கண்டு கொண்டோம்.

கடந்த காலங்களில் போரினால் எமது மக்களுக்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதுடன் 4 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து இழப்பும் ஏற்பட்டது.

இதனால் எமது சமூகம் ஒரு தலைமுறை பின்னோக்கித் தள்ளப்பட்டது. தென்னிலங்கையுடன் ஒப்பிட்டால் தொழில் நுட்ப வளர்ச்சி தவிர்ந்த ஏனையவற்றில் 60 ஆண்டுகள் பின்னோக்கியுள்ளோம். எனவே எல்லா தளங்களிலும் முன்னேற்றம் அடையவேண்டும்.

எமது மக்கள் மூளைப்பலசாலிகள். கடுமையான உழைப்பாளிகள். எனவே அறிவுப் பலமும், கடுமையான உழைப்பும் உள்ள சமூகம் பின்னேக்கியிருக்கக்கூடாது. எமது மக்களில் 8 இலட்சம் பேர் வெளிநாடுகளில் உள்ளனர்.

இந்தியாவும் ஏனைய நாடுகளும் தரவிருக்கும் உதவிகளைக் கொண்டு எங்கள் பிரதேசங்களை வளம் பெறச்செய்வோம்.

யாருக்கும் நாம் குறைந்தவர்கள் இல்லை என்பதை நிலைநாட்டச் செய்வோம். சகல இன மக்களும் சமத்துவமாக வாழுவோம். யாரையும் பழிவாங்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால் யாருக்கும் தலைகுனிய மாட்டோம்.

### இன நெருக்கடிக்கு சிங்களவர் இடமளியார்கள்

1980ஆம் ஆண்டுக்கு முன்னர் உலக நாடுகள் இலங்கையை கண்டு கொள்ளவில்லை. ஆனால் இப்போது இலங்கையின் ஒவ்வொரு அசைவையும் சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கிறது.

தமிழ்-சிங்கள இன நெருக்கடி மீண்டும் ஒரு முறை ஏற்பட சிங்கள மக்கள் இனி இடமளிக்கமாட்டார்கள்.

எனவே பிரிவினை வேண்டாம். சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கவும் வேண்டாம் அவர்களிடம் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். இந்த நாடு அனைவருக்கும் சொந்தம்.

எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்களின் மனச்சாட்சியை தொடக்கூடிய வகையில் விடுக்கவேண்டும்.

எங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் வேறெந்த நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்கும் கிடைக்கவில்லை. ஆனால் நாம் தவறு செய்து விட்டோம் இனியாவது தவறு செய்யாமல் இருப்போம்.

### வடக்கு, கிழக்கை இணைப்பது தவறில்லை

வடக்குகிழக்குமாகாணங்களை இணைப்பது இலங்கைக்கோ அல்லதுசர்வதேசத்திற்கு கோ பாதகமான நடவடிக்கையல்ல. அதனை நாம் நம்பவைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் ஒரு ஆரம்பப்படியாக இருக்கலாம்.

அதிலிருந்து அதிகாரப் பரவ லாக்கல் செய்யப்பட்டு அதில் ஒவ்வொரு சரத் திற்கும் விளக்கங்கள் கூறப்பட வேண்டும்.

இத்துடன் மத்திய அரசாங்கம் ஒரு சில அதிகாரங்களைத் தவிர ஏனையவற்றை மாகாணங்களுக்கு வழங்கவேண்டும் என்றும் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் பொதுச்செயலாளர் சிறிதரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் நவரட்ணராஜா, உறுப்பினர் கங்கா உட்பட்டோர் கலந்து கொண்டனர். (ந-5)

# பெங்களூர் அணி வெற்றி பஞ்சாப் அணி பரிதாப நிலை

(மொகாலி)

பீற்றர்சனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தியது.

இந்தியன். பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று மொகாலியில் நடைபெற்ற லீக் சுற்றின் 31ஆவது போட்டியில் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 27 பந்துகளில் (8 பவுண்டரிகள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் பெப்ரா ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் யுவராஜ்சிங் 20 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக). 36 ஓட்டங்களையும் பிஸ்லா 28, இர்பான் பதான் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வினேய் குமார், ஸ்ரையன், ஜக் கலிஸ், அணித்தலைவர் அனில் கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 182 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி பீற்றர்சன்-ஹேறாலி ஜோடி யின் அதிரடியில் 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 184 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் கெவின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 44 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 66 ஓட்டங்களையும் வீராட் ஹேறாலி 26 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் பாண்டி 29, உத்தப்பா 8 பந்துகளில் ஒரு பவுண்டரி 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சிறிவஸ்தாவ, பிடில் சர்மா, இர்பான் பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 8 ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பெற்று 10 புள்ளிகளை பதிவு செய்து 2ஆவது இடத்தில் உள்ளது.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 8ஆவது போட்டியில் 7ஆவது தோல்வியைச்சந்தித்தது.

## தமிழர்களு...

இனங்களுக்கான உரிமைகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என அரசிடம் கூறியுள்ளார்.

உலகத் தமிழர் பேரவையின் பிரிவினைவாதக் கோரிக்கையையே மிலிபான்ட் கோரியிருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரிய வந்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (ச-5)

## பல்கலை...

இம் மாணவன் நேற்று முன்தினம் முதலாம் அரையாண்டுக்கான பரீட்சையை எழுதியதாகக் கூறப்பட்டது. இம் மாணவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவர் கிளிநொச்சியிலிருந்து மீளக் குடியமர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஐக்கிய தேசிய...

ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றைப் பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 ஆகக் குறைப்பது ஓர் கையொப்பத்தின் மூலம் செய்யக் கூடிய காரியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## ஐ.தே.மு...

யடுத்து இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி குறிப்பிட்டார்.

சுசில் கிந்தெல்பிட்டிய எம்.ரி.வி., எம்.பி.சி. ஊடக வலையமைப்பின் முன்னாள் செய்திப் பணிப்பாளர் ஆவார். (ச-3,5)


சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



எம் மண்ணில் நாம் வாழ,

எம் மண்ணை நாம் ஆள

தளராது குரல் கொடுப்போம்.

X

3

(ச-5039)

இலங்கை தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

…நகர சபை, யாழ்ப்பாணம்.



## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாம், இலங்கை நெருக்கடியான நிலைமைகளில் உதவிகளை மேற்கொண்டிருந்தோம். எனவே தற்காலிகமாக வரிச் சலுகையை நிறுத்தியது என்பது அதற்கான தண்டனையாக அமையாது.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்பட்ட சில நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

நாம் எப்போதும் நட்புடன் இருப்போம். அது எதிர்காலத்தில் மேலும் வளரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய வரிச் சலுகை அதிக நன்மைகளை ஏற்படுத்தியிருந்தது.

அதன் புடைவைப் பொருள்களின் ஏற்றுமதித் துறை 2.68 பில்லியன் டொலர்களிலிருந்து 3.3 பில்லியன் டொலர்களான வளர்ச்சி கண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச–5)

## ஐ.நா.சபையின் செயற்பாடுகள்...

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஈராக் விடயத்தில் பிரித்தானியாவின் தலையீடு தொடர்பில் விசாரணைக் குழுவை அமைப்பதற்கு ஐ.நாவுக்கு 9 வருடங்கள் எடுத்தது.

ஆனால் இலங்கை தொடர்பில் ஆலோசனைக் குழுவை அது 9 மாதங்களில் அமைக்க முற்பட்டுள்ளது. ஐ.நா.தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமக்கு அதிக கால அவகாசங்கள் வழங்கப்பட வேண்டும்.

பிரித்தானியா தனது படையினரை ஈராக்கில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதும்மனித உரிமை மீறலே. பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஐ.நா. இந்த அறிவித்தலை விடுத்துள்ளது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஐ.நாவின் நடவடிக்கைகளை நாம் எதிர்க்கின்றோம். அது எமக்குத் தேவையற்றது. இவ்வாறான ஆலோசனைக் குழுவை அமைப்பதனால் ஐ.நாவின் செயலாளர் நாயகம் அதன் பாதுகாப்புச் சபையில் அனுமதிகளைப் பெற வேண்டும். அதனை பான் கீ மூன் மதிப்பார் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச–5)

## தமிழ்க் கூட்டமைப்பைத் தடை...

டுள்ளது. அரசியல்வாதிகள் மக்களுக்குச் சேவை செய்யாமல் அரசியல் உல்லாசப் பயணிகளாகவே உள்ளனர்.

ஊடகத்தை அடக்கிய ஜனாதிபதி தன் போலித் தேர்தல் வெற்றியைக் கொண்டாடுகின்றார். அடுத்த அரசை அவர்கள் அமைத்தால் ராஜபக்ஷ குடும்பமும் அரசியலில் சண்டியர்களுமே ஆட்சி புரிவர். ஆதிக்கத்திற்கு உதவுபவர்களுக்கு மட்டுமே ராஜபக்ஷ அரசில் அனைத்தும் கிடைக்கும்.

ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தியவர். அவருக்கு கிடைத்த வாக்குகள் மூவின மக்களிடமிருந்தும் சமமாகக் கிடைத்தது.

இதுவே மக்கள் சமமாக வாழக் கூடிய நிலையாகும். ஏப்ரல் 8 ஆம் திகதிக்குப் பின்னர் அனைவரும் இணைந்து சக வாழ்வு அரசொன்றை உருவாக்குவோம்.

ஜனாதிபதி பதவியேற்கவுள்ள நவம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சகவாழ்வு அரசாங்கமொன்று உருவாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டுமெனப் பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார். அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராகப் போராடும்.


இனி நாடு பிளவுபடாது. ஜனநாயகத்தை மதிக்கும் தமிழ்க் கூட்டமைப்புடன் நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்பட எமக்கு எவ்வித தடைகளும் இல்லை. பாதுகாப்புச் செயலருக்கு எவ்வித உரிமையுமில்லை.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்குப் பின்னரே எமது போராட்டம் உச்சிநிலை பெறும். அதற்கு அனைத்து மக்களும் பூரண ஆதரவு நல்க வேண்டும் எனத் தெரிவித்தார். (எ–5)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.